# கடல் தேவதை!

1

நீ
இயற்கை
எனும்
இளைய கன்னி
என்றால்...
நான்
கவிஞனா
இல்லை,
ஓவியக் கலைஞனா?

கடற்கரையில் அவன் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தான். நள்ளிரவின் கருமையைப் போக்க முயற்சி செய்து கொண்டிருந்தது நிலவு.

பெசன்ட் நகர் கடற்கரையில் இன்று போலீஸ் ரோந்து இல்லையே! ஆச்சரியமாக இருக்கிறதே என்று நினைத்தபடியே கடல் அலைகளின் அணிவகுப்பைப் பார்த்தபடி இருந்தான் சித்தார்த்.

கடல் அலை விடாமுயற்சியை மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கிறதோ?

கரையைத் தொட முயற்சித்துத் தோல்வி அடைந்த பொழுதும், மனம் தளராமல் மீண்டும் மீண்டும் கரையை நோக்கி வருகிறதே என்று யோசனையில் மூழ்கினான் அவன்.

அவன் யோசனையைக் கலைத்தது, அலைகளின் மேல் தோன்றி மறைந்த ஏதோ ஒன்று... எ... என்ன இது... சுறா மீனா, இல்லை டால்பினா?

சே... சே... இருக்காது. அவை எல்லாம் நடுக் கடலில்தானே இருக்கும். ஆனால், இது நடுக் கடலில் இல்லையே...

அலைகளில் அடித்து வரப்பட்ட கப்பலின் துண்டா? இ... இல்லை, ஏதாவது மனிதனா? தன் உடல் சட்டெனச் சில்லிட்டுப் போனது போல் உணர்ந்தான் அவன்.

இந்த நேரத்தில் எந்த மனிதன் கடலில் நீச்சல் கற்றுக் கொள்ளப் போகிறான்?



ஒருவேளை தற்கொலை முயற்சியா!

"ஏய்... யார் அது? ஏதேனும் உதவி வேண்டுமா?" கத்தினான் சித்தார்த்.

கடற்கரையில் அவன் குரல் எதிரொலியாகத் திரும்பி, அவன் காதுகளைத் தீண்டியது. சே... ஆபத்தில் இருப்பவன் தொலைவில் இருக்கிறான்.

அது மட்டும் இல்லை... அவன் உயிருக்குப் போராடும் நிலைமையில் இருக்கிறானா... இல்லை, அவன் உயிரோடுதான் இருக்கிறானா... தெரியவில்லையே!

'இங்கே கரையில் இருந்து கொண்டு கற்பனை செய்வது மடத்தனம் சித்தார்த். கடலுக்குள் போய்ப் பார்...' என்று அவன் மூளை அவனுக்குக் கட்டளை இட்டது.

யோசிக்காமல் கடலினுள் புகுந்தான் அவன். கல்லூரியில் படிக்கும் பொழுது நீச்சல் முறையாகக் கற்றுக் கொண்டவன்தான் சித்தார்த்.

ஆனால் நள்ளிரவில், யாருமே இல்லாத கடற்கரையில் ஏதோ ஒன்றைத் தேடிக் கடலினுள் நீச்சல் அடிப்பது இதுவே முதல் முறை.

அவன் இதயம் படபடத்தது.

அந்த உருவத்தை நோக்கி முன்னேறினான் அவன். கடல் அலைகளின் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் ஆடிக் கொண்டிருந்த அந்த உருவத்தை நெருங்கி விட்டான் அவன்.

'கடவுளே! பெண்...' அவன் உதடுகள் முணு முணுத்தன.

அதே நேரம் அந்தப் பெண்ணின் விழிகள் இவன் முகத்தில் ஒரு நொடி பதிந்தன.

பின்பு அவள் விழிகள் மேலே செருகத் தொடங்கின.

'அச்சோ... இவள் நினைவிழக்கிறாள் போல் தோன்றுகிறதே!' என்று பதறினான் அவன்.

அவள் கடலில் மூழ்கிவிடக் கூடாதே என்று நினைத்த படியே, அவளைத் தன்புறம் இழுத்தான் அவன்.

இங்கே எப்படி இந்தப் பெண் வந்தாள்?

அடி ஏதேனும் பட்டு இருக்குமா? படகில் இருந்து விழுந்திருப்பாளா?

ஆயிரம் கேள்விகள் அவன் மனதில் எழுந்தன.

ஒரு கையால் அவள் இடையைப் பற்றித் தன்னுடன் நெருக்கியபடி, இன்னொரு கையால் நீந்தினான். ஏடா கூடமாகக் கடல் அலைகளில் நீந்துவதாலோ, என்னவோ, சீக்கிரமாகவே களைத்துப் போய்விட்டான் அவன்.

கடல் அலைகள் அவனைப் பின்னுக்குத் தள்ளுவது போல் பிரமை ஏற்பட்டது.

'கடவுளே! நான் செய்வது சரியா?

'நான் இங்கே வருவது அம்மாவிற்குக் கூடத் தெரியாதே!' மனதிற்குள் புலம்பினான் அவன்.



நேரம் நத்தை ஊர்வது போல் தோன்றியது அவனுக்கு. கரை ரொம்பத் தொலைவில் இருப்பது போல இருக்கிறதே.

கூடாது... மனதைச் சோர்ந்து போக விடக்கூடாது. நான் கரையை அடைந்து விடுவேன். வேறு எதுவும் என் இலக்கு இல்லை.

கரை மட்டுமே என் இலக்கு. நான் இருக்க வேண்டிய இடம் அதுதான் என்று தனக்குள்ளேயே உறுதி எடுத்துக் கொண்டான்.

கை, கால் சோர்ந்து போனது.

நுரையீரல் எரிவது போல் இருந்தது அவனுக்கு. கடைசியாக, ஒரு வழியாகக் கடற்கரையை அடைந்தான் அவன்.

அவன் இதயத் துடிப்பு பந்தயக் குதிரை போல் எகிறியது. கடல் நீர் எல்லாம் குடித்தாற் போல் ஒரு ஆயாசம் அவனுள் படர்ந்தது.

தன் பிடியில் இருந்த பெண்ணைக் கடல் மணலில் கிடத்தினான். பின்பு அவள் அருகே சோர்ந்து போய்ப் படுத்தான்.

சில நிமிடங்கள் கரைந்தன.

அவன் மூச்சு சீரானது. அப்பொழுதுதான் தன் அருகில் படுத்திருந்த பெண் அசைவின்றி இருப்பதை அவன் கவனித்தான்.

அவள் மூச்சு விடுகிறாளா, இல்லையா என்ற பதட்டம் தொற்றிக் கொள்ள... எழுந்து குனிந்து அவள் மூக்கின் துவாரம் அருகே ஆள்காட்டி விரலை வைத்துப் பார்த்தான்.

மூச்சுக் காற்று வரவில்லை என்று புரிந்தவுடன் அதிர்ச்சி அடைந்தான் சித்தார்த். என்.சி.சி. வகுப்பில் கற்றுக் கொண்ட முதல் உதவி முறை நினைவுக்கு வந்தது அவனுக்கு.

அவள் கீழ்த்தாடையைப் பிடித்து வாயைத் திறந் தான். தன் மூச்சுக் காற்றை எல்லாம் சேகரித்து வாய் வழியாக அவள் வாயினுள் செலுத்தினான்.

பல முறை தொடர்ந்து அதையே செய்து கொண்டு இருந்தான் அவன். தன் உடலில் காற்றே இல்லை என்பது போல் உணர்ந்தான்.

'பெண்ணே! கண் விழித்துப் பார். அதற்காகத்தான் நான் உன்னைக் காப்பாற்றினேன். இந்த மாதிரி அசை யாமல் மரம் போல் படுத்து இருப்பதற்கு அல்ல...' என்று நினைத்தபடியே தொடர்ந்து முதல் உதவி செய்து கொண்டிருந்தான் அவன்.

சட்டெனக் கண்களைத் திறந்தாள் அவள். அவனைப் பார்த்தாள். ஒரு இளைஞன் தன் முகம் அருகே குனிந்து வாய் குவிப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

இருமியபடியே தன் பலத்தை எல்லாம் திரட்டி அவனைத் தள்ளினாள் அவள்.



"ஏய்... என்ன செய்யற நீ...?" கத்தினாள் அவள்.

"உன் உயிரைக் காப்பாற்றினேன்," என்றபடியே அவள் முகத்தில் இருந்த மணலைத் தட்டினான் அவன்.

"நோ... நீ... ஏதோ தப்பான எண்ணத்துடன்தான் என்னை நெருங்கினாய்..." என்றபடியே அவன் கையைத் தள்ளி விட்டாள் அவள்.

சித்தார்த் முகம் இறுகியது.

"கரெக்ட். நீ சொல்வது சரிதான். நான் தினமும் நள்ளிரவில் கடற்கரைக்கு வருவேன். கடல் அலைகளில் சிக்கித் தவிப்பவர்களைக் கண்டுபிடித்து, என் உயிரைப் பொருட்படுத்தாமல் காப்பாற்றி என் ஆசையைத் தணித்துக் கொள்வேன்.

"முட்டாள்... உன்னைப் போய்க் காப்பாற்றினேன் பார். நன்றி சொல்லா விட்டால் கூடப் பரவாயில்லை. இந்த மாதிரிப் பழி சொல்லாதே!" என்றான் அழுத்தமாக.

அவள் முகத்தில் குழப்பம் தெரிந்தது. எழுந்திருக்க முயன்றாள். ஆனால் கால்கள் ஒத்துழைக்க மறுத்தன.

எழுந்து நின்ற சித்தார்த் அவளை நோக்கிக் கை நீட்டினான்.

அவன் கையைப் புறக்கணிக்க வேண்டும் என்று நினைத்தாள் அவள். ஆனால் உடல் சோர்ந்து போன தால் தன் கையை அவனை நோக்கி நீட்டினாள்.

"வேறு எந்தத் தப்பான எண்ணமும் வைத்துக் கொள்ளாதே!" என்று முனகினாள் அவள்.

எழுந்து நின்றவளுக்குக் கால்கள் துவண்டன. ஆகாயம் கீழே தெரிந்தது. மெல்ல மெல்ல நினைவு தப்பியது.

கீழே சரியத் தொடங்கியவளை விழாமல் தாங்கிக் கொண்டான் சித்தார்த்.

"சே... மறுபடியும் மயக்கமா...!" என்றபடியே அவளைக் கைகளில் தூக்கிக் கொண்டு காரை நோக்கி வேகமாக நடந்தான்.

காரின் பின்சீட்டில் அவளைப் படுக்க வைத்தான். பின்பு அவள் உள்ளங் கையைச் சூடு படுத்தினான். உள்ளங்கால்களையும் சூடு பறக்கக் கைகளால் தேய்த் தான்.

காரின் வெளிச்சத்தில் அவளைப் பார்த்தான்.

குழந்தைத்தனம் மிளிரும் முகம். சிலை போன்ற அழகான உடல்.

சிறு வயதில் படித்த 'கடல் கன்னி'யை நினைவு படுத்தினாள் அவள். அந்த நிலையிலும் என் மனம் இப்படி எல்லாம் நினைக்கிறதே என்று தன்னையே கடிந்து கொண்டான் அவன்.

காரில் இருந்த ஹீட்டரை உயிர்ப்பித்தான். சூடான காற்று கார் முழுவதும் பரவியது. அவள் லேசாகக் கண்களைத் திறந்தாள்.

"கடவுளே... தேங்க்ஸ்... இவளைப் பிழைக்க வைத்தியே..." என்றான் சப்தமாக அவன்.



அவள் விழிகள் அவன் முகத்தில் பதிந்தன.

"பெயர்... என்ன?" என்றாள் மெதுவாக.

"ம்... என் பெயர் சித்தார்த்."

"நான்... நான்... யார்? என் பெயர் என்ன?"

பொறுமை இன்றி ஒலித்தது அவள் குரல்.

"உனக்கு... உன் பெயர் ஞாபகம் இல்லையா?"

அவன் குரலில் அதிர்ச்சி தெரிந்தது.

"எனக்கு ஞாபகம் இருந்தால் நான் உன்னைக் கேட்க மாட்டேன்..." என்றாள், பட்டென.

"நீ... நீ ஜோக் எதுவும் அடிக்கவில்லையே..."

"என்னைப் பார்த்தால் உனக்கு ஜோக் அடிக்கும் நிலைமையில் இருப்பவள் போல் தெரிகிறதா?"

"எனக்குத் தெரியாது. நீ யார் என்றே எனக்குத் தெரியாது."

அவள் கண்களில் பயம் தெரிந்தது.

"நிஜமா! எனக்கும் நீ யார் என்று தெரிய வில்லையே!"

"ம்... யோசித்துப் பார். கடைசியாக எது உன் நினை வுக்கு வருகிறது...?"

அவள் கண் மூடினாள்.

"தண்ணீர்தான் என் நினைவுக்கு வருகிறது."

"ஓ.கே. குட்... அதற்கு முன்னால் என்ன நினைவுக்கு வருகிறது? யோசித்துப் பார்."

"எ... எனக்கு வேறு எதுவும் ஞாபகம் வரவில்லை," என்றவளின் குரல் உடைந்தது.

அவள் கண்கள் கலங்கின. கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் திரண்டு கன்னத்தை நனைத்தன.

"எனக்கு எதுவும் நினைவில்லை!" என்றாள் ஆங்கிலத்தில், அழுதபடியே.

அவள் அழுவதைப் பார்த்து அவன் மனம் நெகிழ்ந்தது. தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான் சித்தார்த்.

"லுக். நீ நன்றாகத் தமிழ் பேசுகிறாய். உனக்கு ஆங்கிலமும் தெரிகிறது. நீ தமிழ்நாட்டைச் சேர்ந்தவள் தான். கண்டிப்பாக இந்தியப் பெண்தான் நீ."

"சூப்பர். அப்படி என்றால் நான் நூறு கோடி மக்களில் ஒருத்தி. அப்படித்தானே!" என்றாள் கோபமாக அவள்.

"வாவ்! பார். இந்திய மக்கள் தொகையை நீ கரெக்டாகச் சொல்கிறாய். அதனால் மறுபடியும் யோசித்துப் பார்."

"எனக்கு அதைத் தவிர வேறு எதுவும் நினைவுக்கு வரலை. எத்தனை தடவை சொல்வது!" சீறினாள் அவள்.

சித்தார்த் உதட்டில் புன்னகை பரவியது.



## 2

முடிவில்லாத
நீளமான
பொழுதுகள்
.......
இருக்கக் கூடாதா?
நீ என்
அருகில் இருக்கும்
பொழுது
யாசிக்கிறேன்
காலதேவனை!

"ஏன் இப்ப சிரிக்கறீங்க?" மீண்டும் சீறினாள் அவள்.

"ம்... 'கோபத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி' என்று ஒரு இயக்கம் உள்ளது. கண்டிப்பாக உனக்கும் அந்த இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இருக்காது," என்றான் சிரித்தபடியே அவன்.

அவள் இதழ்களிலும் புன்னகை எட்டிப் பார்த்தது.

"ம்... கண்களை மூடிக் கொண்டு மனதை அமைதி யாக வைத்துக் கொள். உன் மனதில் அப்பொழுது என்ன யோசனை வருகிறது என்று சொல், பார்க்கலாம்."

அவன் சொன்னபடியே கண்களை மூடிக் கொண்டு யோசித்தாள் அவள்.

“கமான், சொல்.”

“ம்... எனக்கு ரொம்பப் பசிக்கிறது.”

“அப்புறம்...”

“ம்... இங்கே பெண்களுக்கான டாய்லெட் எங்காவது இருக்குமா?” என்றாள் மெதுவாக அவள்.

“ஓ... இங்கே பக்கத்தில் பொது மக்களுக்கான கழிவறை ஒன்று இருக்கிறது. நான் காரை இங்கே நிறுத்தி விட்டு உன்னோடு வருகிறேன்.”

“நீ... நீங்கள் எதற்கு?” - சந்தேகம் தெறித்தது அவள் குரலில்.

“உனக்கு இன்னும் என் மேல் முழுமையாக நம்பிக்கை வரவில்லை. அதனால்தான் இப்படி எல்லாம் பேசுகிறாய். நீ ஏற்கெனவே இரண்டு முறை மயங்கி விழுந்து இருக்கிறாய்.

“அதனால்தான் நான் உன்னுடன் வருகிறேன் என்று சொன்னேன். மற்றப்படி வேறு எந்த எண்ணமும் என் மனதில் இல்லை!” என்றபடியே காரை ஓரமாக நிறுத்தினான்.

“ஸாரி...” என்றாள் மெல்லிய குரலில்.

“பரவாயில்லை. இதுதான் டாய்லெட். நான் இங்கேயே இருக்கிறேன். ஐந்து நிமிடங்கள் போதும் என்று



நினைக்கிறேன். இல்லாவிட்டால் உனக்கு ஏதோ பிரச்சனை என்று முடிவு செய்ய வேண்டி வரும்.

“ஸாரி. நீ மயக்கம் போட்டு விழுந்ததால்தான் சந்தேகக் கண்ணுடன் பார்க்க வேண்டி உள்ளது. ஐந்து நிமிடங்களுக்கு மேலே போனால் நான் உள்ளே வர வேண்டி வரும்.”

“நோ... நோ. நான் இரண்டு நிமிடத்தில் வந்து விடுவேன்...” என்றபடியே சென்றாள் அவள்.

சித்தார்த் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். காலை மணி இரண்டு என்று சொன்னது கடிகாரம். இந்த மாதிரி அனுபவம் யார் வாழ்க்கையிலும் ஏற்பட்டு இருக்காது.

ஊர், பெயர் தெரியாத பெண்ணிற்காகக் காத்துக் கொண்டு இருக்கிறேன். அதுவும் எந்த மாதிரி ஒரு இடத்தில் என்று நினைக்கும்பொழுது... ஏனோ சிரிப்பு வந்தது அவனுக்கு.

இந்தப் பெண் நிச்சயமாகக் கிராமத்தைச் சேர்ந்தவள் இல்லை. இவள் நடையில், பேச்சில் ரொம்ப பயம் தெரியவில்லை.

சுதந்திரமாக வளர்ந்த பெண்ணாக இருப்பாள் போல! ஒருவேளை வட இந்தியாவைச் சேர்ந்தவளாக இருப்பாளோ? ஆனால் தமிழ் நன்றாகப் பேசுகிறாளே. யோசித்தபடியே இருந்தான் அவன்.

“போகலாமா...?” என்று அவள் குரல் கேட்க,

'சரி' என்பது போல் தலை அசைத்தான் சித்தார்த்.

"ஸாரி! என்னால் உங்களுக்குக் கஷ்டம்."

"பரவாயில்லை..."

"எ... என்னை எங்கே அழைத்துக் கொண்டு போறீங்க இப்ப...?"

"நீ பசிக்கிறது என்று சொன்னாய்தானே. அதனால் உன்னை அபூர்வா உணவகத்திற்கு அழைத்துக் கொண்டு போகலாம் என்று நினைத்தேன்."

"அபூர்வா உணவகமா?"

"பெயர் கேள்விப்பட்ட மாதிரி இருக்கா...?"

"இல்லை. உங்களுக்குத் தெரிந்த ஹோட்டலா அது?"

"ம்... என்னுடைய ஹோட்டல் அது."

"ஓ... அப்படியா! அபூர்வா என்பது யார் பெயர்? உங்கள் மனைவியோட பெயரா!"

"இல்லை... என் அம்மாவின் பெயர். அம்மா என்றால் என்னைப் பெற்றவர்கள் இல்லை. என்னை வளர்த்தவர்கள் அவர்கள். என்னைப் பெற்ற அம்மா நான் ஒரு வயதாக இருக்கும் பொழுது இறந்து விட்டாள்.

"அதற்குப் பின்பு பாட்டி சொன்னதால் அப்பா இவர்களை மணந்து கொண்டார்கள். அப்பா இறந்து பத்து வருடங்கள் ஓடி விட்டன. அம்மாதான் என் வாழ்க்கையில் எல்லாம். என்னைப் பெற்றவர்கள்கூட



என் மேல் இவ்வளவு பாசமாக இருந்திருப்பார்களோ என்னவோ என்று எனக்கு அடிக்கடி சந்தேகம் தோன்றும்.

"அபூர்வா - பெயரைப் போலவே ஒரு அபூர்வ மான பெண்தான்..." என்றான் உற்சாகமாக சித்தார்த்.

"ஸோ... ஒருத்தி மகனாகப் பிறந்து ஒருத்தி மகனாக வளர்ந்த கண்ணனைப் போலத்தானா நீங்களும்..."

"குட்... உனக்குக் கண்ணனைப் பற்றி எல்லாம் தெரிந்து இருக்கிறதே...! கொஞ்சம் கொஞ்சமாக உனக்கு நினைவு திரும்புகிறது."

"ம்... ஆனால், வேறு எதுவும் நினைவுக்கு வர வில்லையே?"

"பொறுமையாக இரு. இதுதான் ஹோட்டல். வா போகலாம்," என்றபடியே காரை நிறுத்தினான்.

ஹோட்டல் காவலாளி அவனைக் கண்டவுடன் சல்யூட் அடித்தான்.

"ஸார்... என்ன ஸார் இந்த நேரத்தில? ஏதாவது பிரச்சினையா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை ராம். என் ஃபிரெண்ட் இவங்க. ஊரில் இருந்து சர்ப்ரைஸா இருக் கட்டும்னு சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டாங்க. அதான் சாப்பிட அழைச்சிட்டு வந்தேன்."

அவன் தன்னைப் பற்றிச் சொன்ன பொய்யைக் கண்டு அவள் திகைத்தாள்.

பரவாயில்லை! சூழ்நிலைக்கு ஏற்பப் பேசுகிறானே... என்று மனதிற்குள் அவனை மெச்சினாள் அவள்.

காவலாளி பூட்டைத் திறக்க, ஹோட்டலினுள் நுழைந்தான் சித்தார்த். அவனைப் பின் தொடர்ந்தாள் அவள். தூய்மையாக இருந்தது எல்லா இடமுமே.

"ரொம்ப நீட்டா இருக்கு உங்க ஹோட்டல்."

"இதுக்கு முன்னாடி இங்கே வந்த மாதிரி ஞாபகம் இருக்கா உனக்கு?"

"இல்லை... உங்களுக்கு என்னை இங்கே பார்த்ததாக ஞாபகம் இருக்கா?"

"ம்... நான் உன்னைக் கவனித்து இருக்க மாட்டேன். நீ வந்திருந்தாலும் எனக்குத் தெரியாது."

"ஏன்... ரொம்பக் கூட்டமாக இருக்குமா, உங்கள் ஹோட்டல், எப்பொழுதும்."

"ம்... கூட்டம் இருக்கும். ஆனால் நான் சமையல் அறையில் இருப்பேன். நான்தான் இங்கே செஃப்."

"ஓ... அப்படியா! உங்களுக்கு அவ்வளவு நன்றாகச் சமைக்கத் தெரியுமா? எனக்குச் சமையலில் ஏ, பி, சி கூடத் தெரியாது."

"ம்... குட். உங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமா நினைவு திரும்புகிறது. வேறு ஏதாவது நினைவுக்கு வருகிறதா? உங்களுக்குப் பிடித்த உணவு வகைகள், உங்களுக்குப் பிடித்த ஹோட்டல். அந்த மாதிரி ஏதேனும் நினைவு வருகிறதா?"



அவள் 'இல்லை' என்பது போல் தலை அசைத்தாள்.

"சரி... விட்டு விடு. ரொம்பக் கஷ்டப்படுத்திக் கொள்ளாதே. நான் இப்பொழுது உனக்காக பிரெட், இட்லி உப்புமா செய்து கொடுக்கிறேன். உனக்குப் பிடித்தமான உணவு இது என்று நினைத்தபடியே சாப்பிடு..." என்றான் சித்தார்த்.

"ஓ... காலையில் செய்த இட்லியை இப்படி மாற்றுகிறீர்களா? சரி. நான் இன்னைக்கு இங்கே வந்ததால் உங்கள் இட்லிக்கு விமோசனம் கிடைத்தது. நான் வரா விட்டால்... என்ன ஆகி இருக்கும்? எல்லாமே வேஸ்ட் ஆகியிருக்கும்."

"இல்லை... எப்பவுமே எதுவுமே வேஸ்ட் ஆகாது என் ஹோட்டலில்..."

"அது... எப்படி?"

"இங்கே அருகிலேயே ஷெல்டர் என்று ஒரு விடுதி உள்ளது. பெற்றவர்கள் இல்லாத குழந்தைகளைப் பராமரிக்கிறது அந்த நிறுவனம்.

"அந்த நிர்வாகி எனக்கு நல்ல பழக்கம். உணவு வேஸ்ட் ஆகக் கூடாது என்பது என் கொள்கை. அதை நிறைவேற்றுவதில் அவருக்கு முக்கியப் பங்கு உள்ளது. இரவு மீதமாகும் உணவை ஃபிரிட்ஜில் வைத்து விடுவேன்.

"காலை ஆறு மணி அளவில் வந்து அவர் அதை எடுத்துக் கொண்டு சென்று விடுவார்..." என்றபடியே அடுப்பில் வாணலியை வைத்தான் சித்தார்த்.

"ரொம்ப நல்ல விஷயம் இது. வெரி குட்..."

"தேங்க்ஸ்... இன்னும் இரண்டு நிமிடத்தில் உப்புமா ரெடியாகி விடும். நீ அங்கே உட்கார். நான் எடுத்து வருகிறேன்."

"சரி..."

அங்கு இருந்த நாற்காலியில் உட்கார்ந்து இருந்த பொழுது, அவள் பார்வை எதிரில் இருந்த சுவரை அலங் கரித்த ஓவியம் ஒன்றின் மேல் பதிந்தது. அவள் விழிகள் வியப்பால் விரிந்தன.

"இது ரவிவர்மாவின் ஓவியம்தானே!"

"ஆமாம்..."

"நான் ரொம்ப நாளா இதைத் தேடிக் கொண்டு இருந்தேன். எவ்வளவு சாந்தமான முகம், அந்தச் சரஸ்வதிக்கு. கண்களில் கருணை கலந்த கம்பீரமான அமைதி. வீணையைக் கையில் ஏந்தியுள்ள லாவகம், அழகான வெண்மை உடையில் ரொம்பத் தத்ரூபமா இருக்கு...!" என்று உற்சாகமாகப் பேசினாள்.

"ம்... இந்த ஓவியம் அம்மாவுக்குப் பிடிக்கும். அதனால்தான் நான் வைத்து இருக்கிறேன். நீ ஒரு வேளை ஆர்டிஸ்ட்டாக இருந்திருப்பாயா? இவ்வளவு அழகாக இந்த ஓவியத்தைப் பற்றிப் பேசுகிறாயே!" என்றபடியே ப்ரெட் இட்லி உப்புமா நிறைந்த தட்டை அவள் முன்னே டேபிளில் வைத்தான்.



"ம்.. தெரியலையே! எனக்கு என் பெயரே தெரிய லையே...!" என்றாள் கண்கள் கலங்க.

"சரி... அதையே யோசிக்காதே, சாப்பிடு."

ஸ்பூனால் அவள் சாப்பிடுவதைப் பார்த்தான்.

ஸ்பூனையும் ஃபோர்க்கையும் அவள் கையாண்ட விதமே அவள் மேல்தட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

ஐந்து நிமிடத்தில் பிளேட் காலியானது.

"இன்னும் கொஞ்சம் உப்புமா எடுத்து வரட்டுமா?"

"வே... வேண்டாம். வயிறு நிறைந்து விட்டது. ரொம்ப தேங்க்ஸ். அருமையான உப்புமா."

"சரி... போகலாமா...?"

"எ... எங்கே?"

"மருத்துவ மனைக்குத்தான்."

"நோ... ஹாஸ்பிடல் எல்லாம் வேண்டாம்... எ... எனக்கு ஒன்றும் இல்லை."

"லுக்... உனக்கு அம்னீஷியாவாக இருக்கும் என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. உனக்குப் பழைய விஷயங்கள் ரொம்ப ஞாபகம் இல்லை. அதனால் மருத்துவமனைக்குப் போவதுதான் நல்லது."

"எனக்கு ஹாஸ்பிடல் என்ற பெயரே அலர்ஜியாக இருக்கிறது. பயமா இருக்கு!" என்றாள், சிறு குழந்தை போல.

"ம்... இது கொஞ்சம் கஷ்டமான விஷயம்தான். ஆனால் ப்ளீஸ் நோ என்று சொல்லாதே. மருத்துவ மனைக்குப் போனால்தான் டாக்டர்ஸ் உன்னைப் பரிசோதிக்க முடியும்."

அவளிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.

"சரி... வருகிறேன்."

"இதுதான் நல்ல பெண்ணிற்கு அழகு. வா, போக லாம்."

"ஆனால், என்னிடம் பணம் இல்லை. அதோடு மெடிக்கல் இன்சூரன்ஸ் விவரம் ஏதும் நினைவுக்கு வர வில்லையே... என்ன செய்வது?"

"மெடிக்கல் இன்சூரன்ஸ் பற்றியெல்லாம் பேசுகிறாய். அதனால் நீ வெளிநாட்டிலே ரொம்ப வருடம் இருந்து இருப்பாயோ என்று எனக்குச் சந்தேகமா இருக்கு."

அங்கே மௌனம் பரவியது.

## 3

நீ
நடந்து
போகும்
பாதை மேல்
எனக்குப்
பொறாமை!



மலர்ப் பாதங்களைத்
தாங்குகிறதே
என்று!

"ம்... எனக்கு எதுவும் நினைவுக்கு வர மாட்டேங் குதே..."

"பரவாயில்லை. அதைப் பற்றியே நினைத்துக் கவலைப்படாதே. மருத்துவ மனைச் செலவைப் பற்றியும் கவலைப்படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன்."

"என்னை உங்களுக்குத் தெரியாதுதானே! இப்பொழுதுதானே நாம் சந்தித்தோம்."

"ஆமாம்..."

"பின் ஏன் எனக்காகச் செலவு செய்யத் தயாராக இருக்கீங்க..."

"தெரியவில்லை. உன்னைக் கடலில் இருந்து காப் பாற்றிய பின்பு ஏனோ அப்படியே விட்டுவிட்டுப் போக மனம் வரவில்லை."

"எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கு. இப்படியும் நல்ல மனிதர்கள் இருக்கிறார்களே என்று. ஒருவேளை என் வாழ்க்கையில் நான் சந்தித்ததெல்லாம் ரொம்ப சுய நலமான மனிதர்களா...?"

"மெதுவாக அதைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம். இப்ப இறங்கலாம்," என்று காரை நிறுத்தினான்.

"ஓ... இதுதான் ஹாஸ்பிடலா?"

"ம்... இந்த ஏரியாவில் இது நல்ல ஹாஸ்பிடல்."

"இது என்ன இடம்?"

"திருவான்மியூர்... சென்னையில் உள்ள இடம் இது..."

ஹாஸ்பிடல் ரிசப்ஷனில் இருந்த பெண் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"என்ன ஸார், ஏதாவது எமர்ஜென்ஸி கேஸா..."

"ம்... இவங்க கடல் நீரில் மூழ்கிட்டாங்க. கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் காப்பாற்றினேன்."

"ஓ... ஏதாவது அடியா மேடம்?"

"அதெல்லாம் இல்லை. ஆனால் என் பெயர் உள்பட என்னைப் பற்றிய விவரம் எதுவும் எனக்கு நினைவுக்கு வரவில்லை."

"ஓ... அம்னீஷியா போல. ஓ.கே. கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. சீஃப் டாக்டர் இன்னும் பத்து நிமிஷத்தில வந்திடுவார். இங்கே உட்காருங்க..." என்று எதிரில் இருந்த சோபாவைக் கை காட்டினாள் அவள்.

"ஓ.கே. தேங்க்ஸ்..." என்றபடியே சோபாவை நோக்கி நடந்தான் சித்தார்த்.

ரிசப்ஷனில் இருந்த பெண் தொலைபேசி வழியாக யாரையோ தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருந்தாள்.



"மேடம்... உங்க பெயர் சொல்லுங்க..."

"லுக்... எனக்கு என் பெயர் நினைவுக்கு வர வில்லை என்று சொன்னேன் அல்லவா? ஒரு தடவை சொன்னால் உனக்கு அது புரியாதா?" என்று படபடத்தாள் அவள்.

"ஸாரி... ஸாரி மேடம்..." என்றாள் அந்தப் பெண்.

"வர்ஷினி... இந்தப் பெயர் பிடித்து இருக்கிறதா உனக்கு?" என்றான் சித்தார்த்.

"ம்... நன்றாக இருக்கிறதே..."

"அப்ப இனிமேல் உன் பெயர் இதுதான்..."

"ஓ... தேங்க்ஸ்... ரொம்ப நன்றி!" என்றவள், அவன் கையைப் பற்றிப் புன்னகைத்தாள்.

"மேடம்... இவங்க பெயரை வர்ஷினின்னு எழுதிக் கோங்க..." என்றான் சித்தார்த், ரிசப்ஷன் அழகியிடம்.

"அட... வர்ஷினியை எங்க இருந்து சார் பிடிச்சீங்க. சூப்பர் பெயர்..."

சித்தார்த் இதயம் ஏனோ படபடத்தது. அவன் அதரங் களில் புன்னகை படர்ந்தது.

"ஸார், நீங்க உள்ளே போகலாம். சீஃப் டாக்டர் வந்திட்டார். அந்த அறைதான்..." என்று கை காட்டினாள் ரிசப்ஷன் அழகி.

இருவரும் டாக்டரின் அறையை நோக்கி நடந்தனர்.

"ஹலோ டாக்டர்!" என்றான் சித்தார்த்.

"ஹலோ, என்ன பிராப்ளம், சொல்லுங்க..."

நடந்த விஷயங்களை அவரிடம் கோவையாக எடுத்துச் சொன்னான் சித்தார்த்.

"ஓ... சில நேரம் அதிர்ச்சியால் கூட இந்த மாதிரி ஏற்பட வாய்ப்பு இருக்கு. அதிர்ச்சியில் இருந்து மீளும் பொழுது மெதுவாகப் பழைய நினைவுகள் தானாகத் திரும்பும்..." என்றார் டாக்டர்.

"ரொம்ப நாள் ஆகுமா, டாக்டர்...?" என்றாள் வர்ஷினி.

"அதை ரொம்பத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. எதற்கும் சில பரிசோதனைகள் செய்து விடலாம்..." என்றபடியே தன் எதிரில் இருந்த நோட்-பேடில் எதையோ எழுதினார்.

பின்பு அதை வர்ஷினியிடம் நீட்டினார்.

"என்ன டெஸ்ட் டாக்டர் இது?"

"ம்... இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன்..."

"ஓ... ஏதேனும் பெரிய பிரச்சனை எனக்கு இருக்கும் என்று சந்தேகப்படுகிறீர்களா டாக்டர்..."

டாக்டர் சிரித்தார்.

"நீ நன்றாகப் பேசுகிறாய். அதோடு உனக்குச் சின்ன வயது. அதனால் உனக்குச் சீக்கிரமாக நினைவு திரும்பி



விடும். கவலைப்படாதே. இதெல்லாம் ரொட்டின் டெஸ்ட் தான். தலையின் உள்ளே அடி ஏதும் பட்டு இருக்கா என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் இதெல்லாம் உதவுகின்றன."

"தேங்க்ஸ் டாக்டர்!" என்றாள் வர்ஷினி.

"நீ சித்தார்த்துக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும், பெண்ணே..." என்றார் டாக்டர், சிரித்தபடியே.

"கமான் டாக்டர். நான் பெரிதாக எதுவும் செய்து விடவில்லை. என் நிலையில் யார் இருந்திருந்தாலும் இதைத்தான் செய்து இருப்பார்கள்..." என்றான் அவன்.

"உன் வயசு என் அனுபவம் சித்தார்த். வாழ்க்கை எனக்கு நிறையப் பாடங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. உன்னைப் போல் இளைஞர்கள் இந்தியாவிற்குத் தேவை..."

சித்தார்த் முகம் கூச்சத்தால் சிவந்தது.

"தேங்க்ஸ் டாக்டர். டெஸ்ட் ரிசல்ட் வந்த பிறகு உங்களை வந்து சந்திக்கிறோம்..." என்றான் அவன்.

"ஆல் தி பெஸ்ட் வர்ஷினி."

"தேங்க்ஸ் டாக்டர்!" என்றபடியே எழுந்தாள் அவள்.

ரிசப்ஷனில் இருந்த பெண்ணிடம் டாக்டர் கொடுத்த பேப்பரை நீட்டினாள்.

"மேடம்... எல்லாம் சேர்ந்து பதினைந்தாயிரம் கிட்ட ஆகும். பேமெண்ட் எப்படிச் செய்யப் போறீங்க. கார்ட் வழியாவா, இல்லை... கேஷா கட்டப் போறீங்களா?"

"இந்தாங்க கார்ட்..." என்று கிரெடிட் கார்டை நீட்டினான் சித்தார்த்.

"தேங்க்ஸ்... என்னை நம்பிப் பணம் கொடுப்பதற்கு!" என்றாள், மெதுவாக – வர்ஷினி.

"பரவாயில்லை. உங்களுக்கு நினைவு திரும்பியவுடன் தந்து விடுவீர்கள்தானே?" என்றான் சிரித்தபடியே.

"உங்களுக்கு அந்த நம்பிக்கை இருக்கிறதா?"

"எது... நீங்கள் பணம் தருவீர்கள் என்றா?"

"ம்... அது இல்லை. எனக்கு நினைவு திரும்பி விடும் என்ற நம்பிக்கை இருக்கிறதா?"

"மேடம்... அந்த ரூமுக்குப் போங்க... ஸார், நீங்க இங்கேயே வெயிட் பண்ணுங்க!" என்று ரிசப்ஷன் அழகி குறுக்கிட... அவர்கள் பேச்சுத் தடைப்பட்டது.

"வர்ஷினி... நான் இங்கேயே இருக்கிறேன்."

"சரி..." என்றபடியே அவள் நடந்தாள்.

இவளை நான் வீட்டுக்கு அழைத்துச் சென்றால் அம்மா என்ன நினைப்பார்கள்? பேச்சுத் துணைக்கு ஆள் கிடைத்தாகி விட்டது என்று அம்மா சந்தோஷமாக இருப்பார்கள் என்று நினைத்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

நேரம் நத்தை நகர்வது போலத் தோன்றியது அவனுக்கு. என் வாழ்க்கையில் சட்டென ஒரு வித்தியாசமான நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.



இது நல்ல விஷயமா? இல்லை... இதனால் பிரச்சனை ஏதேனும் வருமா?

அவன் மனதில் சந்தேகம் படர்ந்தது.

"டெஸ்ட் எல்லாம் எடுத்து முடிச்சிட்டாங்க..." என்று வர்ஷினியின் குரல் அவன் யோசனையைக் கலைத்தது.

"சரி... ரிசல்ட் எப்ப வரும்னு கேட்டுட்டுப் போகலாம்."

"மேடம்... ரிசல்ட்ஸ் எப்ப வாங்கிக்கலாம்?" என்றாள் வர்ஷினி.

"ம்... நாளைக்குக் காலையில பன்னிரண்டு மணிக்கு வந்தீங்கன்னா, ரிசல்ட்டை சீஃப் டாக்டரிடம் காட்டலாம்."

"சரி... தேங்க்ஸ். நாளைக்கு வரோம்..." என்றபடியே, அங்கே இருந்து நகர்ந்தாள் வர்ஷினி.

மீண்டும் காரில் போகும்பொழுது, அவள் மனம் படபடத்தது.

"இப்ப நாம எங்கே போறோம்?"

"ம்... என் வீட்டிற்கு..."

"ஓ... என்னை வேறு எங்காவது தங்க வைக்க முடியாதா?"

"இது பகல் இல்லை. விடியற்காலை மணி ஐந்து. அதனால் வேறு எங்கேயும் உன்னைத் தங்க வைப்பது சரி என்று எனக்குப் படவில்லை."

"ஓ.கே... உங்கள் வீட்டில் யார் இருக்கிறார்கள்? உங்கள் அம்மா மட்டுமா...?"

"அம்மா இப்ப வீட்டில் இல்லை. அவர்கள் ஃபிரெண்டின் மகளின் திருமணம் கேரளாவில் நடக்க இருக்கிறது. அதனால் அம்மா இப்ப கேரளாவில்தான் இருக்கிறார்கள். திரும்பி வர நாலு நாளாகும்."

"ஓ... ப்ளீஸ் என்னை வேறு எங்காவது விட்டு விடுங்களேன்."

"லுக். உனக்கு ஏன் இந்த மாதிரி அநாவசியமான சந்தேகம். உன்னை ஏதாவது செய்ய வேண்டும் என்று நான் நினைத்திருந்தால்... தனியாக, ஆதரவின்றி நீ மயக்கமாக இருந்தபொழுதே நான் செய்திருப்பேன்.

"அதனால் கவலைப்படாமல் வா. அதோடு எங்கள் வீட்டில் உள்ள எல்லா அறைகளுக்கும் கதவு உண்டு. பூட்டும் வசதியும் உண்டு. போதுமா?"

"பூட்டு என்று இருந்தால், அதை உடைப்பதற்கும் வழி இருக்கும்தானே...?"

"நான் கேட்டரிங்தான் படித்து இருக்கிறேன். பூட்டை உடைப்பது எப்படி என்று படிக்கவில்லை."

"உங்கள் வீட்டைத் தவிர எனக்குத் தங்குவதற்கு வேறு இடம் ஏதும் இல்லையா?"

"இருக்கிறதே..."

"என்ன இடம் அது?"



"ம்... போலீஸ் ஸ்டேஷன்."

"என்னது...?" அதிர்ச்சி தெரிந்தது அவள் குரலில்.

"யெஸ்... இன்னொரு இடமும் இருக்கு..."

"என்ன இடம் அது?"

"ஆதரவற்றவர்களுக்கென ஒரு காப்பகம் உள்ளது. அங்கே உன்னைத் தங்க வைக்கலாம். இப்ப நீயே சொல். உன்னை எங்கே அழைத்துக் கொண்டு போக..."

"உங்கள் வீட்டின் அறைகளுக்குப் பூட்டும் வசதி இருக்கிறதுதானே. அது நிஜம்தானே?"

"எத்தனை தடவை உன்னிடம் சொல்வது? என் மனதில் அந்த மாதிரியான தப்பான எண்ணம் ஏதும் இல்லை. போதுமா...?"

"ஸோ... நான் அழகாக இல்லையா, உங்களைப் பொறுத்தவரை...?"

'அடக் கடவுளே! இப்படிப் பேசினாலும் தப்பு, பேசா விட்டாலும் தப்பாகத் தெரிகிறதே இவளுக்கு.

'ஒருவேளை அம்னீஷியா வந்ததால் இவளுக்குத் தன் தோற்றம் மேல் தாழ்வு மனப்பான்மை வந்து விட்டதா...?' என்று ஒரு நொடி யோசித்தான் சித்தார்த்.

"அப்படி இல்லை வர்ஷினி. நீ நல்ல அழகி. ஆனால் என் உணர்வுகளை எனக்குக் கட்டுப்படுத்தத் தெரியும். உன் சூழ்நிலையை எனக்குச் சாதகமாகப் பயன்

படுத்திக் கொண்டேன் என்றால் எனக்கும் மிருகத்திற்கும் எந்த வித்தியாசமும் இல்லை..." என்றான் அழுத்தமாக.

அவள் மௌனமாக இருந்தாள்.

"சரி. உன்னை எங்கே விட வேண்டும் என்று நீயே சொல். போலீஸ் ஸ்டேஷனா? ஆதரவற்றோர் விடுதியா? என் வீடா?"

"உங்கள் வீடு!" என்றாள், தயங்கியபடியே.

"இன்னும் என்ன தயக்கம்?"

"எனக்குத் தற்காப்புக் கலை ஏதேனும் தெரியுமா என்று யோசித்துக் கொண்டு இருந்தேன்."

"ஓ... அப்ப நான் கூட இப்படி யோசிக்கலாம் போல..."

"எப்படி..."

"நீ உளவுத்துறையைச் சேர்ந்தவளாக இருக்கலாம். தீவிரவாத இயக்கத்திற்கும் உனக்கும் தொடர்பு இருக்கலாம். மனித வெடிகுண்டாகக் கூட நீ இருக்கலாம். நீ யார் என்றே எனக்குத் தெரியாது.

"உன்னை வீட்டுக்கு அழைத்துப் போவது நான் எடுக்கும் பெரிய ரிஸ்க் என்றுகூட நான் நினைக்கலாமே!" என்றான், சிரித்தபடியே.

"நான் யார் என்று உங்களுக்குத் தெரியும். கடந்த ஐந்து மணி நேரமாக நீங்கள் என்னுடன்தான் டைம் ஸ்பெண்ட் செய்தீர்கள்.



"எனக்கு வர்ஷினி என்று பெயர் வைத்தது நீங்கள் தான். சரி. வர்ஷினி என்றால் என்ன அர்த்தம்?"

"ம்... இது மழையுடன் சம்பந்தப்பட்ட பெயர்."

"அப்பாடா... இப்பதான் நிம்மதியா இருக்கு..."

"ஏன்..."

"ம்... தீவிரவாதத்துடன் தொடர்பு உடைய பெயரோ இது என்று நான் நினைத்தேன்."

அவன் சிரித்தான்.

"உனக்குச் சீக்கிரமாக நினைவு திரும்பிவிடும் என்று நான் நினைக்கிறேன்."

"எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்றீங்க...?"

"ம்... ஐந்து மணி நேரத்திற்குள் நடந்ததை எல்லாம் தொடர்பு படுத்திப் பேசுகிறாயே... அதனால்தான் சொன்னேன்."

அவள் இதழ்களில் புன்னகை படர்ந்தது.

## 4

வானவில்லில்
புதிதாக
இந்த
வண்ணத்தைச்
சேர்க்கக் கூடாதா?

யோசனை

தோன்றியது

உன்

இளஞ் சிவப்பு

ஏறிய கன்னங்களைப்

பார்க்கும் பொழுது!

அந்தப் பெரிய வீட்டின் முன்பு காரை நிறுத்தினான் சித்தார்த்.

அவனைக் கண்டவுடன் கேட் அருகே இருந்த செக்யூரிட்டி வேகமாகக் கதவைத் திறந்தார்.

காரை மரத்தடியின் கீழே நிறுத்தினான் சித்தார்த்.

"வர்ஷினி... வா. இதுதான் என் வீடு!" என்றபடியே கார் கதவைத் திறந்தான் அவன்.

கீழே இறங்கியவுடன் வேப்ப மரத்தின் காற்று அவள் முகத்தில் மோதியது. பூக்களின் நறுமணம் கலவையாக அவள் நாசியை நிறைத்தது.

பூட்டைத் திறந்தான் சித்தார்த். அவளுக்கு ஏனோ தயக்கமாக இருந்தது.

"வா உள்ளே. எல்லா அறைகளிலும் பூட்டும் வசதி உள்ளது. நீயே வந்து சோதித்துப் பார்..." என்றான் சிரித்தபடியே அவன்.



ஹாலில் இருந்த சோபாவில் அவள் அமர்ந்தாள். கண்களை மூடினாள். ஏனோ உடலும், மனமும் சோர்ந்து போனது போல் இருந்தது அவளுக்கு.

"வர்ஷினி! ரொம்ப டயர்டா இருக்கா?"

"ம்... ஆமாம்."

"சரி... இந்தா, இந்த உடையை அணிந்து கொள். பின்பு உன் அறைக்குப் போய்த் தூங்கு..." என்று சோபா அருகில் ஒரு டி-ஷர்ட்டையும் ஜீன்ஸையும் வைத்தான்.

"இது யார் உடை?"

"ம்... என்னுடையதுதான். உனக்குக் கண்டிப்பாக லூசாகத்தான் இருக்கும். இப்போதைக்கு இதை வைத்து அட்ஜஸ்ட் செய்து கொள். அப்புறம் உனக்கு வேறு உடைகள் வாங்கலாம்..."

"சரி... ரொம்ப தேங்க்ஸ். சாரி. என்னால் உங்களுக்குச் சிரமம்."

"அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாதே. இது தான் உன் அறை. கொஞ்ச நேரம் ஓய்வெடு."

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"நானும் தூங்கத்தான் போகிறேன்."

"ஓ... நீங்கள் இன்று ஹோட்டலுக்குப் போகவில்லையா?"

"ம்... இன்று வாராந்திர விடுமுறை. அதனால் போக வேண்டும் என்ற நிர்பந்தம் கிடையாது. அதோடு நேற்று

இரவு உணவு ரொம்ப மீந்து போகவில்லை. அதனால் அந்த நிர்வாகியிடம் உணவை நாளைக்கு இரவு வந்து எடுத்துக்கொண்டு போகும்படி சொல்லி விடுவேன்."

"சரி... தேங்க்ஸ் அகெய்ன்..."

"ஏதேனும் வேண்டும் என்றால் கேள். நான் என் அறையில்தான் இருப்பேன்."

'சரி!' என்பது போல் தலை அசைத்தாள் அவள். பின்பு அறையினுள் நுழைந்தாள். அறை அழகாக இருந்தது.

இந்த அறை யாருடையதாக இருக்கும்? அவனுடைய அம்மாவின் அறையாக இருக்குமோ? இருக்கலாம். ரொம்பத் தூய்மையாக இருக்கிறதே!

எனக்கென வீடு என்று ஒன்று இருந்திருக்கும் தானே! அது எப்படி இருந்திருக்கும்? யார் என்னுடன் இருந்திருப்பார்கள்?

என்னைத் தேடிக் கொண்டு யாரேனும் இந்த உலகின் மூலையில் இந்நேரம் இருப்பார்களா? எனக்கு ஏன் எதுவும் நினைவுக்கு வர மாட்டேங்கிறது!

இயலாமையும், சுய பச்சாதாபமும் சேர்ந்து கொள்ள, அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டவுடன், கண்களை அவசர அவசரமாகத் துடைத்துக் கொண்டு, வேகமாகக் கதவை நோக்கி நடந்தாள்.



கதவுக்கு வெளியே சித்தார்த் நின்று கொண்டு இருந்தான். அவன் கையில் தண்ணீர் பாட்டில் ஒன்று இருந்தது.

"இந்தா வர்ஷினி, தண்ணீர்... அப்புறம் மாத்திரை."

"இது என்ன மாத்திரை?"

"பயப்படாதே. மயக்க மருந்தெல்லாம் ஏதும் இல்லை. இது க்ரோஸின்தான். உடம்பு வலி தெரியாது. அதோடு காய்ச்சல் ஏதும் வராமல் தடுக்கும். டாக்டர்தான் உனக்குக் கொடுக்கச் சொன்னார்."

"நான் கவனிக்கவில்லையே. அவர் எப்பொழுது சொன்னார்?"

"நீ எக்ஸ்ரே டெஸ்ட் எடுப்பதற்கு உள்ளே இருந்தாய். அப்பொழுதுதான் சொன்னார்."

"தேங்க்ஸ்..." என்றபடியே அதை வாங்கிக் கொண்டாள் அவள்.

"டேக் கேர்!" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து அகன்றான் சித்தார்த்.

மாத்திரையைப் போட்ட பின்பு கட்டிலில் படுத்தாள் வர்ஷினி. உடல் சோர்ந்து போய் இருந்ததால் தூக்கம் அவளை ஆட்கொண்டது.

அறையில் கணினியில் இ-மெயில்களை செக் செய்துவிட்டு சோபாவில் தன்னை மறந்து படுத்துத் தூங்கி விட்டான் சித்தார்த்.

கண் விழித்த பொழுது சித்தார்த்துக்கு முதலில் எதுவும் புரியவில்லை. பின்பு கொஞ்சம் கொஞ்சமாக நடந்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன.

அதோடு ஒரு புது வகையான வாசம் அவன் நாசியை நிறைத்தது. தாளிக்கும் பொழுது புதினா இலைகளைப் போட்டால் வாசம் வருமே... என்று நினைத்தபடியே எழுந்தான்.

சமையல் அறையில் வர்ஷினி அடுப்பின் முன் நின்று கொண்டிருப்பது அவன் கண்ணில் பட்டது.

"என்ன செய்யற வர்ஷினி? வாசனை ரொம்ப நல்லா இருக்குதே!"

"அச்சோ... நீங்கள்தானா? நான் ஒரு நிமிஷம் பயந்து போய் விட்டேன்."

"ஸாரி... சரி. இது என்ன டிஷ்?"

"ம்... உங்களுக்கே தெரியவில்லையா? அப்ப நான் ரொம்ப மோசமாகத்தான் சமைப்பேன் போல."

"இது புதினா என்று எனக்குத் தெரியும். இதை வைத்து என்ன செய்யப் போகிறாய்?"

"புதினா சாதம் செய்யலாம் என்று நினைத்தேன்."

"பரவாயில்லையே. உனக்கு இதெல்லாம் நினைவில் இருக்கிறதே!"

"என்னுடைய அம்னீஷியா ரொம்ப செலக்டிவாக இருக்கிறது. என்ன செய்வது? சில விஷயங்கள் நினைவில் இருக்கிறது. பல முக்கியமான விஷயங்கள் நினைவில் இல்லை."



"நீ அரசியல்வாதியாக இருந்திருப்பாயோ?"

"ஏன்...?"

"அவர்களுக்குத்தான் செலக்டிவ் அம்னீஷியா எல்லாம் வரும்."

அவள் கலகலவெனச் சிரித்தாள்.

"குட்... வர்ஷினி. இந்த மாதிரி சிரித்துக்கொண்டு இரு. உன் மனம் அமைதியாக இருந்தாலே போதும். பழைய நினைவுகள் உனக்குச் சீக்கிரமாகத் திரும்பி விடும். சரியா...?"

"சரி..."

"நீ போ... நான் புதினா ரைஸ் செய்து விடுகிறேன். கொஞ்ச நேரமாவது தூங்கினாயா? இல்லை, அழுது கொண்டே இருந்தாயா?" என்றான் ரைஸ் குக்கரை அடுப்பில் வைத்தபடியே.

"நன்றாகத் தூங்கினேன். உங்கள் மாத்திரை நன்றாக வேலை செய்தது."

"ம்... நல்ல விஷயம்தான். சாப்பிட்ட பின்பு கிளம்புவோம்."

"எங்கே...?"

"ஹாஸ்பிடல் போக வேண்டுமே!"

"கண்டிப்பாகப் போக வேண்டுமா?"

"ரிசல்ட் ரெடியாக இருக்கும். இப்ப மணி நாலு..."

"எ... எனக்குப் பயமா இருக்கு."

"உனக்கு எதுவும் இருக்காது. பயப்படாதே."

"எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்றீங்க?"

"ம்... உள்ளுணர்வு அப்படிச் சொல்லுது... உனக்கு நம்பிக்கை இருக்கோ, இல்லையோ... எனக்கு என் உள்ளுணர்வு மேல் நம்பிக்கை இருக்கு."

அவளிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது. புதினா விழுதில், உப்பு, காரம் எல்லாம் திட்டமாகச் சேர்த்தான் அவன்.

"சாப்பிடலாமா...? முதலில் நீயே சாப்பிடு..."

"ஏன்... நான் ஏதாவது விஷம் வைத்திருப்பேன் என்று சந்தேகமாக இருக்கிறதா? அதனால்தான் என்னை முதலில் சாப்பிடச் சொல்கிறீர்களா?"

"நான் வாயில் சூயிங்கம் வைத்து இருக்கிறேன். அதனால்தான் அப்படிச் சொன்னேன்."

அவள் முகம் சிவந்தது.

"ஸாரி..." என்றபடியே சாதத்தைச் சுவைத்தாள்.

"அட... நிஜமாலுமே நல்லா இருக்கே...!"

"ஸோ, உனக்கு நன்றாகச் சமைக்கத் தெரிகிறது. அப்படித்தானே! நல்ல விஷயம்தான்."



அவள் இதழ்களில் புன்னகை படர்ந்தது. இருவரும் ஏதும் பேசாமல் சாப்பிட்டு முடித்தனர்.

"கண்டிப்பாகப் போய்த்தான் ஆக வேண்டுமா? அந்த டாக்டரைப் பார்க்கத்தான் வேண்டுமா?"

சின்னக் குழந்தை போல் அவள் ஹாஸ்பிடலைக் கண்டு பயப்படுவதும், டாக்டரைக் கண்டு ஒதுங்குவதும், அவனுக்கு வியப்பாக இருந்தது.

"வா... வர்ஷினி. எனக்கும் வெளியில்தான் வேலை இருக்கு..."

"சரி!" என்றவளின் குரல் அவள் முழுதாகச் சம்மதிக்க வில்லை என்பதை உணர்த்தியது.

ஹாஸ்பிடலில் கூட்டம் அதிகமாக இருந்தது. இவ்வளவு நோயாளிகளா என்று நினைத்தபடியே ரிசப்ஷனை நோக்கி நடந்தான் சித்தார்த்.

"மேடம்... பில் இந்தாங்க. பெயர் வர்ஷினி. ரிப்போர்ட் ரெடியா?"

"யெஸ் ஸார். இந்தாங்க..." என்று ஒரு பெரிய காகிதக் கவரை நீட்டினாள், ரிசப்ஷனை அலங்கரித்த பெண்.

"வர்ஷினி, டாக்டர் அங்கேதான் இருக்கிறார். வா போகலாம்," என்றபடியே அவர் அறையை நோக்கி நடந்தான்.

"ஹலோ டாக்டர்!" என்றாள், புன்னகைத்தபடியே - வர்ஷினி.

"ஹலோ வர்ஷினி. வா உட்கார்."

"இந்தாங்க டாக்டர், ரிப்போர்ட்ஸ்..." என்று கையில் இருந்த கவரை அவரிடம் நீட்டினான் சித்தார்த்.

ரிப்போர்ட்ஸை எல்லாம் டேபிளில் வைத்து ஊன்றிக் கவனித்தார் டாக்டர்.

சில நொடிகள் நகர்ந்தன.

"குட். எல்லாமே நார்மலா இருக்கு."

"ஆனால், எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லை."

"உன் தலையில் எந்தக் கட்டியும் இல்லை. எந்த அடியும் ஏற்பட்ட மாதிரி தெரியவில்லை. உனக்கு வந்து இருப்பது ஹிஸ்டீரியா அம்னீஷியா."

"என்னது ஹிஸ்டீரியாவா?"

"இதற்கும் ஹிஸ்டீரியாவிற்கும் சம்பந்தம் இல்லை. அதிர்ச்சியாலோ, அளவுக்கு அதிகமான துக்கத்தாலோ இந்த மாதிரி ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. எதுவாக இருந்தாலும் சீக்கிரமாகவே நினைவு திரும்பிவிடும் பெரும்பாலானவர்களுக்கு."

"ஸோ, எல்லோருக்கும் நினைவு திரும்பாது. ஆனால் பெரும்பாலானவர்களுக்குத் திரும்பும். அப்படித்தானே?"

"யெஸ்..."

"எனக்கு நினைவு திரும்புமா, டாக்டர்?"

"கண்டிப்பாக. எனக்கு நம்பிக்கை இருக்கிறது."



"எப்படி டாக்டர் அவ்வளவு உறுதியாகச் சொல் றீங்க?"

"உனக்குச் சின்ன வயது. உன் உடம்பில் எந்த நோயும் இல்லை. உன் பி.பி., சர்க்கரை அளவு எல்லாமே நார்மலா இருக்கு. அதனால்தான் நான் அவ்வளவு கான்ஃபிடெண்டாக இருக்கிறேன்.

"அதோடு கடலில் மூழ்கியதால் உனக்குப் பலத்த அதிர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. அதனால்தான் உனக்கு எதுவும் ஞாபகம் இல்லை."

"சரி. எனக்கு எப்பொழுது ஞாபகம் வரும்?"

"மூன்று அல்லது நான்கு வாரங்கள் டைம் எடுக்கும். நான் சில மருந்துகள் எழுதித் தருகிறேன்.

"மூன்று வாரங்கள் கழித்து மீண்டும் உன்னைப் பரிசோதிக்கலாம்," என்றபடியே நோட் பேடில் இருந்த பேப்பரில் எதையோ எழுதினார்.

பின்பு பேப்பரைக் கிழித்துச் சித்தார்த்திடம் கொடுத் தார்.

"ஸோ... நீதான் வர்ஷினியைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவளிடம் இயல்பாக நடந்து கொள். அவள் பேஷண்ட் இல்லை. அவளுக்குத் தேவைப்படுவது அன்பும், ஆதரவும்தான்."

"கண்டிப்பாக டாக்டர்!" என்றான் சித்தார்த்.

# 5

உன்னை
ஸ்பரிசிக்க
முடியாமல்
தடுக்கும்
குடை மேல்
மழைக்குக்
கோபம் போல!
.......
காற்றின் உதவியோடு
புயலை
வரவழைக்கிறது!

**கா**ரில் எஃப்.எம். சானல் ஒன்றில் இந்திப் பாட்டு ஒன்று ஒலித்துக் கொண்டு இருந்தது.

"நல்ல பாட்டு இது... கபி... கபி..." என்று வாய் விட்டுப் பாடத் தொடங்கினாள் வர்ஷினி.

அவள் குரலில் வெளிப்பட்ட குழைவு, மென்மை கலந்த இனிமை எல்லாவற்றையும் ரசித்தான் சித்தார்த். ஒருவேளை இவள் பாடகியாக இருந்து இருப்பாளோ என்ற சந்தேகம் அவனுள் எட்டிப் பார்த்தது.

"ரொம்ப அருமையாகப் பாடுகிறாய் வர்ஷினி. இந்தி மொழி உனக்கு ரொம்பப் பரிச்சயமானது போல இருக்



கிறது. நீ வடநாட்டைச் சேர்ந்த தமிழ் பேசும் குடும்பத்தைச் சேர்ந்தவளாகக் கூட இருக்கலாம்."

"தெரியவில்லை. எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லை!" என்றாள் மெல்லிய குரலில்.

"உனக்குக் கண்டிப்பாக நினைவு திரும்பிவிடும். டாக்டர் கூட அதைத்தானே சொன்னார்.

"அதனால் நீ உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திக் கொள்ளாதே. நிகழ்காலம் மட்டுமே நமக்குச் சொந்தம். இறந்த காலம் முடிந்து போன புத்தகம். அதைத் திரும்பத் திரும்பப் புரட்டிப் பார்ப்பதில் எந்தப் பயனும் இல்லை.

"எதிர்காலம் நமக்குச் சொந்தம் இல்லாத ஒன்று. நாளை என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது, வர்ஷினி!" என்றான் சிறு குழந்தைக்குச் சொல்வது போல்.

"நான் உங்களுக்குக் கஷ்டம் கொடுக்கிறேன் என்று வேறு உறுத்தலாக இருக்கிறது. எந்த வேலையும் செய்யாமல், உங்கள் வீட்டில் சும்மா உட்கார்ந்து கொண்டு, உங்கள் பணத்தையும், நேரத்தையும் வீண் அடிப்பதற்கு எனக்கு விருப்பம் இல்லை."

"ம்... சரி. உன் மனசில் இருந்து அந்தக் கவலையைக் காணாமல் போக்க ஒரு வழி இருக்கு. என் மனதில் எந்தச் சங்கடமும், உறுத்தலும் இல்லை. உனக்காகத்தான் இந்த யோசனை. பிடித்திருந்தால் சரி என்று சொல்."

"சொல்லுங்கள்... என்ன யோசனை?"

"என் ஹோட்டலுக்கு ஒரு ஆள் தேவை. அது ஏன் நீயாக இருக்கக் கூடாது?"

"அச்சோ... சமையல் செய்வதற்கா? உங்கள் ஹோட்டல் நன்றாக ஓடுவது உங்களுக்குப் பிடிக்க வில்லையா?" பதறினாள் அவள்.

"ஈ.ஸி... ஈ.ஸி. ஏன் இவ்வளவு பதட்டம் உனக்கு? சமைப்பது உனக்கு ரொம்பப் பழக்கமில்லாத ஒன்று என்று எனக்குத் தெரியும்."

"அப்ப வேறு என்ன வேலை?"

"கணினியில் பில்லிங் செய்வதற்கு ஒரு ஆள் வேண்டும்."

"ஓ... இது தேவலை என்று நினைக்கிறேன். இதற்கு முன்னால் யார் இந்த வேலையைச் செய்து கொண்டு இருந்தார்கள்?"

"மாதங்கி என்று ஒரு பெண்தான் செய்துகொண்டு இருந்தாள். ஆனால் அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. அதனால் போன வாரம் முதல் அவள் வேலைக்கு வர வில்லை.

"ரொம்ப நல்ல பெண். நம்பிக்கையானவள் கூட, உண்மையைச் சொல்லப் போனால் நான் அன்று கடற்கரையில் கவலையுடன் அர்த்த ராத்திரியில் உட்கார அவள்தான் காரணம்..."

"ஓ... காதல் தோல்வியா? மாதங்கியை நீங்கள் காதலித்தீர்களா? அச்சோ... ஸாரி..."



"சே... சே... நீ உடனே அப்படி எல்லாம் முடிவு கட்டிவிடாதே. பில்லிங்கிற்கு யாரைப் போடுவது என்று எனக்குக் கவலையாக இருந்தது."

"ஓ... ஸாரி. நான் தப்பாகப் புரிந்து கொண்டு விட்டேன்."

"பரவாயில்லை... வா, இறங்கலாம்..."

"என்ன இடம் இது?" என்றாள், எதிரே இருந்த பெரிய அடுக்கு மாடிக் கட்டடத்தைப் பார்த்தபடியே அவள்.

"உனக்குத் தேவையான உடைகளை நீ வாங்கிக் கொள்ளலாம். இது நல்ல கடை. எல்லா வகையான உடைகளும் இருக்கும். கொஞ்சம் விலை கூடுதலாக இருக்கும். பட். அதைப் பற்றிக் கவலைப்படாதே..."

"சரி... அந்தப் பில்லிங் வேலையை நானே செய் கிறேன். வேறு எந்த ஆளையும் போட்டு விடாதீர்கள் ப்ளீஸ்..."

"ம்... சரி... நாளை உனக்குச் சொல்லிக் கொடுக் கிறேன். என்னென்ன வேலைகள் அங்கே உண்டு என்று. ரொம்ப கஷ்டம் இல்லை."

"தேங்க்ஸ்..."

"இதோ இந்தக் கடைதான். நான் இங்கே ஆண் களுக்கான செக்ஷனில் இருக்கிறேன். பணத்தைப் பற்றிக் கவலைப்படாதே."

"என் சம்பளத்தில் இருந்து கழித்துக் கொள்ளுங்கள். சரியா?"

"உத்தரவு மேடம்!" என்றான் சிரித்தபடியே அவன்.

'எனக்கு என்ன உடை பிடிக்கும்? என்ன நிறம் எனக்குப் பிடிக்கும்? என் உடைகளை நானே தேர்வு செய்வேனா? இல்லை, வேறு யாராவது தேர்வு செய்வார்களா?

'வேறு யாராவது என்றால் அது யாராக இருக்கும்? அம்மாவா, அப்பாவா? இல்லை... காதலனா... கணவனா... சே! என்ன கொடுமை இது!

'ஏன் ஒன்றுமே என் நினைவுக்கு வரமாட்டேன் என்று அடம் பிடிக்கிறது?' என்று கோபம் அவளை ஆட்டுவித்தது.

"மேடம்! சல்வார் செக்ஷன் இதுதான். புது வகையான சல்வார் நிறைய வந்திருக்கு. பாருங்க மேடம்..." என்று கடையில் இருந்த பெண் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே அவள் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

"என்ன வர்ஷினி, உடை ஏதும் எடுக்கலையா! பிடிக்கவில்லையா எதுவும்?" என்றான் சித்தார்த்.

"எனக்கு... எனக்கு ஏன் சித்தார்த் எதுவும் ஞாபகம் இல்லை? என் பெயர்கூடத் தெரியவில்லையே. ஏன் எனக்கு மட்டும் இந்த நிலைமை? ப்ளீஸ்... எனக்கு உதவி செய்யுங்க!" என்று அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

அவள் கண்கள் கலங்கின. கோபத்தாலும், இயலாமையாலும் முகம் வாடி இருந்தது.



"ஏய்... வர்ஷினி. என்ன இது. வா. நானே உனக்கு செலக்ட் செய்கிறேன். கமான்..." என்று அவள் தோளைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொன்னான்.

"ஸாரி... ஏனோ எனக்கு என் மேலயே கோபம் வந்தது. அதனால்தான் இப்படி ரியாக்ட் செய்துவிட்டேன்."

"பரவாயில்லை. நீ பெண். ரோபோ இல்லை. உன் நிலைமையில் நான் இருந்திருந்தால் இந்தக் கடையையே ஒரு வழி செய்து இருப்பேன்.

"ஆனால் நீ ரொம்ப மெச்சூர்டாக நடந்து கொள்கிறாய். நானே உன்னைக் கண்டு ஆச்சரியப்பட்டு இருக்கிறேன். கூல் கோள் நீ... குக்கும்பரைப் போல்!"

அவள் கலகலவெனச் சிரித்தாள்.

"ஏய்... இப்ப எதுக்கு சிரிக்கற..."

"இல்லை. வர்ணிக்கும் பொழுதுகூட உங்களுக்குக் காயும், பழமும்தான் ஞாபகம் வருகிறதா? உங்கள் தொழில் மேல் அவ்வளவு காதலா?" என்றாள், சிரித்தபடியே.

"ம்... என்ன செய்வது? உன் கண்கள் திராட்சைப் பழம் போல் இருக்கிறது. கன்னங்கள் ஆப்பிள் போல் இருக்கிறது. உதடு ஸ்ட்ராபெர்ரி, பற்கள் வெண் மாதுளை முத்துக்கள் போல் இருக்கின்றன..." என்றவனின் கண்கள் அவள் முகத்தில் சுவாரசியமாகப் படிந்தன.

அவன் விழிகள் தன்னுள் ஏதோ மாற்றங்களைச் செய்வதை அவளால் உணர முடிந்தது.

சட்டென அவன் கையில் பதிந்திருந்த தன் கையை எடுத்துக் கொண்டாள்.

"போகலாமா... சித்தார்த். உங்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடலாம்தானே?"

"டேய் என்று கூப்பிடாதவரை பரவாயில்லை..."

அவள் மீண்டும் சிரித்தாள்.

"சரி... நீங்களே ஏதாவது உடை எனக்கு எடுத்துக் கொடுங்கள்."

"ஓ.கே... நான் இதுவரை அம்மாவுக்கு மட்டுமே உடை எடுத்து இருக்கிறேன். என் டேஸ்ட் உனக்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன்."

"நீங்கள் மோசமாக செலக்ட் செய்யமாட்டீர்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது."

"அது எப்படி உனக்கு நம்பிக்கை வந்தது?"

"என் உள்ளுணர்வு சொல்கிறது. உங்களுக்கு மட்டும்தான் உள்ளுணர்வு வேலை செய்யுமா என்ன?"

இப்பொழுது சிரிப்பது அவன் முறையாயிற்று. கடல் நீலம், அடர் பச்சை, இளம் மஞ்சள் ஆகிய நிறங்களில் சல்வார்களைத் தேர்வு செய்தான்.

பின்பு வெள்ளை, ஆரஞ்சு நிறங்களில் டாப்ஸை தனியாக செலக்ட் செய்தான்.

நான்கு ஜீன்ஸ் பேண்ட்டை எடுத்து அவளிடம் கொடுத்தான்.



"சைஸ் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்," என்றான்.

ஏனோ அவள் முகத்தில் கூச்சம் படர்ந்தது.

"ட்ரையல் ரூம் அங்கே இருக்கு மேடம். வேண்டு மானால் போட்டுப் பாருங்கள் மேடம்," என்றாள் அந்தப் பெண்.

"இல்லை. சரியாக இருக்கும். இதையே பேக் செய்து விடுங்கள்..." என்றாள் வர்ஷினி.

"சரி... உள்ளாடைகள் அங்கே இருக்கும் என்று நினைக்கிறேன். நான் இங்கேயே வெயிட் செய்யறேன், வர்ஷினி!" என்றான் சித்தார்த்.

அவன் டீஸண்டாக ஒதுங்கிக் கொண்டது அவ ளுக்குப் பிடித்தது. இவன் எவ்வளவு நல்லவன்! அந்த டாக்டர் சொன்னது உண்மைதான்.

வேறு யார் கண்ணிலும் மாட்டாமல், நான் இவன் கண்ணில் கடலில் மாட்டியது என் நல்ல நேரமே என்று நினைத்தபடியே உள்ளாடைகளைத் தேர்வு செய்தாள்.

பில்லை வாங்கிக் கொண்டு சித்தார்த் இருந்த இடம் நோக்கி நடந்தாள்.

பில்லை அவனிடம் நீட்டினாள்.

"வேறு ஏதும் வேண்டாமா வர்ஷினி?"

"இல்லை. எதுவும் வேண்டாம். இரவு உடைகூட வாங்கி இருக்கிறேன்."

"சரி, வா. கேஷ் கவுண்டருக்குப் போய்ப் பணத்தைக் கொடுத்து விடலாம்."

"ரொம்ப அதிகமாகச் செலவு செய்துவிட்டேனோ?"

"அப்படி எல்லாம் இல்லை வர்ஷினி. எப்படியும் உன் சம்பளத்தில் இருந்து கழித்து விடுவேன். இல்லா விட்டால் உனக்கு நினைவு திரும்பியவுடன் நீயாகத் திருப்பிக் கொடுக்கப் போகிறாய்."

"நீங்கள் என் மேல் வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி."

"ம்... நம்பிக்கைதான் வாழ்க்கை."

"அட... கல்யாண் நகைக்கடை விளம்பரத்தில் பிரபு கூட இப்படித்தானே டயலாக் அடிப்பார்."

"ஹேய்... உனக்கு இதெல்லாம் ஞாபகம் இருக்கே. குட்... குட்... எனக்கு ஒரு யோசனை இப்பதான் ஃப்ளாஷ் ஆகுது. இப்படிச் செய்யலாமா?"

"இப்படி என்றால் எப்படி?"

"பக்கத்தில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷன் போய் உன்னைப் பற்றித் தகவல் சொல்லிவிட்டு வந்து விட லாமா?"

"ஏன்... நான் ஏதாவது குற்றம் செய்திருப்பேன் என்று நீங்கள் சந்தேகப்படுகிறீர்களா?" படபடத்தாள் அவள்.

"சே... சே... உன்னைக் காணவில்லை என்று யாரேனும் எந்தப் போலீஸ் ஸ்டேஷனிலாவது புகார்



கொடுத்து இருப்பார்கள். நீ யார் என்று தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும். அதற்குத்தான் சொன்னேன். ஸாரி!" என்றான்.

## 6

நீ
வித்தியாசமானவள்தான்!
சந்தேகமே
இல்லை
பெண்ணே!
சிங்கத்தை
உன் மருளும்
விழிகளால்
வென்ற
மான் நீ!

இரண்டு வாரங்கள் வேகமாக இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன, வர்ஷினிக்கு.

காரணம் அபூர்வா ஹோட்டலில் பில்லிங்கில் அவள் மும்முரமாக இருந்தாள்.

"நீ ரொம்பச் சீக்கிரமாக வேலையைக் கற்றுக் கொண்டாய். நீ ரொம்ப ஸ்மார்ட்!" என்றபடியே அவள் அருகே வந்தான் ராஜ்.

"ஓ... அப்படி எல்லாம் ஏதும் இல்லை. கூட்டம் கொஞ்சம் அதிகமானால் நான் படும் பாடு எனக்குத் தானே தெரியும்."

"அது... எல்லோருக்கும் இருக்கும். மாதங்கியும் இதேபோல்தான் செய்வாள்."

"கூட்டம் அதிகமாக இருக்கக்கூடாது என்று வேண்டிக் கொள்ளலாம் என்று நினைத்தால்... உடனே அந்த நினைப்பு தப்பு. அது சித்தார்த்துக்கு நீ செய்யும் துரோகம் என்று என் மனச்சாட்சி என்னைக் குத்திக் காட்டுகிறது.

"என்ன செய்யலாம் ராஜ்? கூட்டம் வந்தால் என் பாடு திண்டாட்டம். கூட்டம் வராவிட்டால் சித்தார்த் பாடு திண்டாட்டம்!" என்றாள் சிரித்தபடியே.

"ஆனால் நீ வராவிட்டால் பாஸ் பாடு திண்டாட்டம் தான்..." என்றான் ராஜ்.

"ஆமாம்... சமையலைக் கவனிப்பாரா? இல்லை, பில்லிங்கைக் கவனிப்பாரா?"

"நான் அதைச் சொல்லவில்லை."

"வேறு எதைச் சொல்கிறாய்? எனக்குப் புரிய வில்லை."

"ம். பாஸுக்கு உன் மேல் தனி அக்கறை!" என்று குறும்பாகக் கண் அடித்தான்.

"அதெல்லாம் ஏதும் இல்லை. எல்லாம் உன் கற்பனை."

"நான் யூகிப்பது தப்பாக ஆனது கிடையாது."



"என்ன தப்பாக ஆனது கிடையாது ராஜ். அங்கே பார்சல் செக்ஷனில் உன்னைத் தேடிக்கொண்டு இருக் கிறார்கள். நீ இங்கே வர்ஷினியை வேலை செய்ய விடாமல் பேச்சுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறாய்..." என்றபடியே அங்கே வந்தான் சித்தார்த்.

"ஓ.கே. பாஸ். நான் பார்சல் செக்ஷனுக்குப் போகிறேன். நீங்கள் வர்ஷினியைக் கவனித்துக் கொள் ளுங்கள்."

"ஏய்... என்ன உளர்ற நீ?"

"ஸாரி பாஸ். வர்ஷினியின் வேலையை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல வந்தேன்."

வர்ஷினியின் முகம் சிவந்தது. ராஜ வேண்டும் என்றே இப்படிப் பேசுகிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

"நைட் ஏதாவது சாப்பிட்டாயா வர்ஷினி."

"இல்லை... கஸ்டமர்ஸ் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தார்கள். அதனால் போக முடியவில்லை."

"மணி ஒன்பது ஆச்சு. போய்ச் சாப்பிடு..."

"நீங்கள்... சாப்பிட்டு விட்டீர்களா?"

"இல்லை..."

"இரண்டு பேருமே சாப்பிடலாமே..."

"சரி... நான் ராஜை அனுப்புகிறேன். பில்லிங்கை அவன் பார்த்துக் கொள்ளட்டும். நீ போய் டைனிங் ஹாலில் இரு."

"சரி..." என்றபடியே டைனிங் ஹாலை நோக்கி நடந்தாள் அவள்.

வாஷ்பேஸினில் முகத்தைக் கழுவினாள். அங்கு இருந்த டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். சித்தார்த் இல்லாவிட்டால் தன் வாழ்க்கை என்னவாகி யிருக்கும்? நினைக்கும்பொழுதே அவள் முதுகுத் தண்டு பயத்தால் சில்லிட்டுப் போனது.

"உனக்குச் சப்போட்டா அல்வாவும், தோசையும் கொண்டு வந்திருக்கிறேன். வேறு ஏதாவது வேண்டுமா, வர்ஷினி...?"

"போதும். இதுவே அதிகம்!" என்றபடியே, தட்டை அவனிடமிருந்து வாங்கி டேபிளில் வைத்தாள்.

"வேலை பிடித்து இருக்கிறதா, வர்ஷினி?"

"யெஸ். ரொம்ப நேரம் போவதே தெரியவில்லை. தேங்க்ஸ் சித்தார்த்."

"ம்... நீ ரொம்ப சீக்கிரமாக வேலையைக் கற்றுக் கொண்டாய் வர்ஷினி. மாதங்கி போன பிறகு வேறு யாரை நியமிப்பது என்று நான் ரொம்பவே குழம்பி இருந்தேன். கடல் அன்னை உன் ரூபத்தில் எனக்கு உதவி செய்துவிட்டாள்..." என்றான் சிரித்தபடியே.

அவன் சிரிக்கும்பொழுது கூடவே சிரிக்கும் அவன் கண்களை ரசித்தாள் அவள். அவன் அடர்ந்த மீசையின் கீழிருந்த வெண்பற்கள் அவளுள் ஏதோ ஒரு உணர்வைத் தோற்றுவித்தன.



சே! இது என்ன எண்ணம்? என் மனம் ஏன் இப்படித் தறிகெட்டு ஓடுகிறது? நான் யார் என்றே எனக்குத் தெரியவில்லை.

நான் திருமணமான பெண்ணாகக்கூட இருக்கலாம். எ... எனக்குக் குழந்தைகூட இருக்கலாம்.

"என்ன ஆச்சு வர்ஷினி. சட்டுன்னு ஏதோ உலகுக்குப் போயிட்டே?"

"இ... இல்லை. ஏதோ யோசனை. சட்டுன்னு ஏதோ மூளையில் ஃபிளாஷ் ஆனது போல் பிரமை!" என்று சமாளித்தாள்.

"தலை ஏதாவது வலிக்கிறதா வனி? எதுவாக இருந் தாலும் மறைக்காமல் சொல்..." என்றவனின் குரலில் பதட்டம் தெரிந்தது.

வர்ஷினியைச் சுருக்கி 'வனி' என்று அவன் எப் பொழுதாவதுதான் அவளை அழைப்பான். ஆனால் அவன் அப்படி அழைக்கும் போதெல்லாம் அவள் இதயம் படபடக்கும். வயிற்றில் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள் படபடக்கும்.

"என்ன வனி... சொல்லுமா."

"அதெல்லாம் எதுவும் இல்லை. நீங்க அநாவசிய மாகப் பயப்படாதீர்கள்."

"சரி... நாளைக்கு டாக்டரிடம் போகலாமே..."

"நோ. எதுக்கு சித்தார்த்?"

"இல்லை. இரண்டு வாரம் கழித்து அவர் வரச் சொன்னார் அல்லவா?"

"எனக்குப் பழைய நினைவுகள் வரவே வராதா சித்தார்த்?"

"வரும் வர்ஷினி. பொறுமையாக இரு..."

"வராவிட்டால் என்ன செய்ய?"

"நீ என் பாதுகாப்பில் எவ்வளவு நாட்கள் வேண்டு மானாலும் இருக்கலாம் வர்ஷினி."

"நான் உங்களுக்குச் சுமையாக இல்லையா?"

"இல்லை... நீ சுகமான சுமை வனி. நீ இங்கு வந்து இரண்டு வாரங்கள்தான் ஆகின்றன என்றால் என்னால் நம்பவே முடியவில்லை.

"ரொம்ப வருடங்களாக நீ என் அருகிலேயே இருப்பது போல் ஒரு பிரமை!" என்றான் மென்மையாக.

அந்த மென்மையில் தான் கரைவது அவளுக்குப் புரிந்தது. இவனும் என்னைப் போலவே உணர்கிறானா! அவள் மனதில் சந்தோஷம் அலைபோல் பரவியது.

"உங்களுக்கு ஒரே ஒரு தோசை போதுமா? நான் கிச்சன் போய் வேறு ஏதேனும் எடுத்துக் கொண்டு வரவா?" என்று பேச்சை மாற்றினாள் அவள்.

"இல்லை வர்ஷினி. இதுவே போதும். இன்னும் ஒரு பத்து நிமிஷத்தில் வீட்டிற்குப் போகலாம்."



"ஓ.கே... ஆன்ட்டிக்கு டின்னர் ஏதாவது எடுத்துக் கொண்டு போக வேண்டுமா?"

"இல்லை. அம்மாவுக்கு இன்னிக்கு ஓட்ஸ் கஞ்சி தான் சாப்பிடணும் போல இருக்காம்."

"சரி... அப்ப நான் ரெடியாயிருக்கேன். போகும் பொழுது கூப்பிடுங்க..."

"கண்டிப்பாக..." என்று சொல்லியபடியே கை கழுவினான் அவன்.

வீட்டை அவர்கள் அடைந்த பொழுது, இரவு மணி பத்து.

"பாவம் ஆன்ட்டி! நமக்காகத் தினமும் கண்விழித்துக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்."

"ம்... நான் அவர்களிடம் எவ்வளவோ தடவை சொல்லிவிட்டேன். நமக்காகக் காத்துக்கொண்டு இருக்க வேண்டாம் என்று. ஆனால் அவர்கள்தான் கேட்காமல் பிடிவாதம் பிடிக்கிறார்கள்."

"நான் சொல்லிப் பார்க்கவா ஆன்ட்டியிடம்...?"

"ம்... நீ சொன்னால் அம்மா கேட்பார்கள்..."

"அது எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்றீங்க?"

"நீ கடல் தேவதை. அம்மா உன்னை அப்படித் தானே அழைப்பார்கள். தேவதை சொன்னால் மறுபேச்சுக் கிடையாது!" என்றான், கண்களில் குறும்பு மின்ன.

"சித்தார்த்..." என்று சிணுங்கினாள் அவள்.

"ம்... எனக்கும் நீ தேவதைதான்..." என்றபடியே, காரை நிறுத்தினான். சட்டென அவள் கையைப் பற்றியவன், மெதுவாக அவள் கையை உயர்த்திப் புறங் கையில் இதழ் பதித்தான்.

தன் உடலில் மின்சாரம் பாய்வது போல் உணர்ந் தாள் அவள். ஏதோ ஒரு நதியில் மூழ்குவது போல் ஒரு உணர்வு அவளை ஆட்டுவித்தது.

"வனி... நான் இதுவரை எந்தப் பெண்ணிடமும் இந்த மாதிரி உணர்ந்தது இல்லை.

"ஆனால், உன்னிடம் நான் என்னை இழந்து விட்டேன். உன் நிலைமையை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தேன்.

"பட்... என்னால் இனி என்னை ஏமாற்றிக் கொண்டு உன்னிடம் இயல்பாக நடந்து கொள்ள முடியாது. என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா வனி? எனக்கு நீ வேண்டும். என் வாழ்க்கையின் இறுதிவரை!" என்றபடியே அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

படபடக்கும் அவள் கண்களை இதழ்களால் ஒற்றி எடுத்தான். பின்பு மெதுவாக அவள் உதடுகளை உரசி னான்.

தன் உடலில் ஏதோ மாயம் நடக்கிறது என்று அவளுக்குப் புரிந்தது. புது உலகில் சஞ்சரிப்பது போல் அவள் உணர்ந்தாள்.



அவள் கழுத்து வளைவில் அவன் முகம் புதைத் தான்.

"வனி... டியர்..." என்று அவள் காதோரம் கிசுகிசுத் தான்.

அவள் மூளையில் ஏதோ ஒரு மின்னல் பளிச் சிட்டது போல் தோன்றியது. அவள் முகம் சட்டென மாறுவதை அவன் உணர்ந்தான்.

சட்டென அவளிடம் இருந்து விலகினான்.

"ஸாரி... வனி... நான்... நான்... ஐ அம் ஸாரி..." என்றான் மெதுவாக.

"பரவாயில்லை... உங்கள் மனதில் இருப்பதைத் தானே நீங்கள் சொன்னீர்கள்..." என்றாள் அவள் மெல்லிய குரலில்.

"நான் அதற்கு ஸாரி சொல்லவில்லை. உன்னிடம் நான்... எல்லை மீறி நடந்து கொண்டேன். ஐ அம் ஸாரி அகெய்ன். ப்ளீஸ் என்னைத் தப்பாக நினைக்காதே. இதை மனதில் வைத்துக் கொண்டு என் ப்ரபோசலை ஏற்றுக் கொள்ளாமல் இருந்துவிடாதே..."

"நான் யோசிக்க வேண்டும் சித்தார்த்."

"ம்... நான் உன்னை அவசரப்படுத்தவில்லை. ஆனால் ரொம்ப நாள் எடுத்துக் கொள்ளாதே!" என்றான் மெதுவாக.

"சரி..." என்பது போல் தலை அசைத்தாள் அவள்.

காரைப் பார்க் செய்துவிட்டு இறங்கியவன் கார் கதவைத் திறந்து அவள் இறங்குவதற்காகக் காத்திருந் தான்.

"இனிமேல் இந்த மாதிரி நடந்து கொள்ளமாட்டேன். ஐ அம் ஸாரி..."

"நான் அனுமதித்தால் கூடவா?"

அவளை அறியாமல் வார்த்தைகள் பூவாகச் சிதறின.

அங்கே மௌனம் சில விநாடிகள் பரவியது.

"ஏய்... வனி!" என்று அவளை அணைத்தான் சித்தார்த்.

"சித்து..." என்று அவன் மார்பில் முகம் புதைத்தாள் அவள்.

"இந்தக் கடல் தேவதை என்னவளா! என்னால் நம்ப முடியவில்லை..." என்றபடியே அவள் கூந்தலில் முகம் புதைத்தான்.

"என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா சித்து?"

"உன்னை முதல் முதலாக நிலவொளியில், ஈர ஆடையில் பார்த்தபொழுதே என் மனதில் சலனம், வனி. சே! ஆபத்தான நிலையில் உள்ள ஒரு பெண்ணை இப்படிப் பார்ப்பது தப்பு என்று என்னையே நான் கடிந்து கொண்டேன்.

"நீ அருகில் உள்ளபொழுது என் மனம் தடுமாறும். இதுவரை யாரும் என்னை இப்படி இம்சை செய்தது



இல்லை டியர்..." என்றபடியே அவள் மூக்கைத் திருகினான்.

"ம்... ஆன்ட்டி இதற்கு ஒத்துக் கொள்வார்களா?"

"அம்மா போன வாரம் என்னிடம் திருமணப் பேச்சை எடுத்தார்கள்."

"ஓ... அப்படியா? நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"நீ என் மனதில் இருக்கிறாய் என்று நான் அவர்களிடம் சொல்லி விட்டேன்."

"வாட்..."

வியப்பால் அவள் விழிகள் விரிந்தன.

"யெஸ்... காதலைக் காதலியிடம் சொல்லாமல் அதைப் பற்றி அம்மாவிடம் சொன்ன முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்..." என்றான் சிரித்தபடியே.

அந்தச் சிரிப்பு அவளையும் தொற்றிக் கொண்டது. நிலைக்குமா அவர்கள் மகிழ்ச்சி?

## 7

என்னை
நான்
தொலைத்து
விட்டேன்
உன்
விழிகளில்!

புதிதாகப்

பிறந்து

விட்டேன்

இப்பொழுது!

அடுத்த நாள் காலையில் எழுந்திருக்கும்பொழுது முன் தினம் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் வர்ஷினியின் மனதில் படம் போல் விரிந்தன.

சித்தார்த் தன்னிடம் ப்ரபோஸ் செய்தது கனவு போல் இருந்தது அவளுக்கு. இரண்டு வாரங்கள்தான் அவனுடன் பழகி இருப்பேன்.

ஆனால் ரொம்ப வருடங்கள் பழகியது போல் ஒரு உணர்வு என்னுள் தோன்றுகிறதே! அதற்கு என்ன காரணம் என்று தனக்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டாள்.

அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

'யாராக இருக்கும்? ஆன்ட்டியா?' என்று நினைத்த படியே கதவைத் திறந்தாள்.

"ஹாய் வனி... குட் மார்னிங்..." என்றான் சித்தார்த், முகம் முழுக்கப் புன்னகையுடன்.

அவனைக் காலையில் தன் அறை வாசலில் எதிர் பார்க்காததால் அவள் முகம் வியப்பால் விரிந்தது.



"குட் மார்னிங்..." என்று முனகினாள்.

"நேற்று ராத்திரி தூங்கவே முடியலை வனி..."

"ஏன் கொசுக்கடியா?" என்றாள் கிண்டலாக.

"ஏய், நான் கஷ்டப்படுவது உனக்குக் கிண்டலாக இருக்கா?" என்றவனின் பார்வை அவளை மேலும் கீழும் அளந்தது.

தான் இரவு உடையில் இருக்கிறோம் என்ற உண்மை அவளுக்கு அப்பொழுதுதான் உறைத்தது.

"என்ன விஷயம் சித்தார்த்?"

"அறை வாசலிலேயே என்னை வைத்துத்தான் பேச வேண்டுமா?"

"சரி... ஒரு டு மினிட்ஸ் டைம் கொடுங்க. நான் வேறு உடை அணிந்து வருகிறேன். ஹாலில் சோபாவில் உட்கார்ந்து பேசலாம்."

"ஏய்... அப்படியா விஷயம்... சரி. போய் உடை மாற்றிக் கொண்டு வா..." என்றவன், அவள் எதிர்பார்க்காத சமயம், சட்டென அவள் அறையினுள் நுழைந்து கதவைச் சாத்தினான்.

"சித்து... என்ன இது?" அவள் பதறினாள்.

"வனி..." என்று அவளைத் தன்புறம் இழுத்தான்.

"அச்சோ... என்ன இது?" அவள் திமிறினாள்.

"ஏன் வனி, என்னைப் பிடிக்கலையா? பிடிக்கலை என்று சொல். உடனே விட்டு விடுகிறேன்..." என்ற

படியே ஆள்காட்டி விரலால் அவள் கன்னத்திலே கோல மிட்டான்.

"சித்து... ப்ளீஸ்... இதெல்லாம் திருமணத்திற்குப் பிறகு வைத்துக் கொள்ளலாமே..."

"நமக்குத்தான் திருமணம் நடந்து விட்டதே!" என்று அவள் காதோரம் கிசுகிசுத்தான் அவன்.

"எப்ப சித்து?" அதிர்ந்தாள் அவள்.

"ம்... நேற்றுதான். உன் மனதில் நானும், என் மனதில் நீயும் இருக்கிறோம். இதயங்கள் இடம் மாறிய பின்பு திருமணம் என்பது சும்மா ஒரு பேச்சுக்குத்தான்..." என்றவனின் கண்களில் காதல் பொங்கியது.

"ம்... எப்ப ஸார் இப்படிக் கவிஞனாக மாறினீங்க...?"

"உன்னால்தான் வனி..." என்றபடியே அவள் நெற்றியில் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த கூந்தல் கற்றையை ஒதுக்கினான்.

"ஆன்ட்டி வரப் போறாங்க... ப்ளீஸ்..."

"அம்மா கோவிலுக்குப் போய் இருக்காங்க."

"நீங்க டியூட்டிக்குக் கிளம்பலையா?"

"ம்... போகணுமா?"

"சித்து... இது என்ன சின்னக் குழந்தையாட்டம். கிளம்புங்க..."

"ம்... உன் கையில் என்னை ஒப்படைத்து விட்டேன் குழந்தையாக!" என்று காதோரம் கொஞ்சினான்.



"ஓ... அப்படியா, சித்து. அப்ப நான் சொல்றதைக் கேளுங்க..." என்று அவன் மூக்கைத் திருகினாள்.

"ம்... சொல்லு வனி..."

"டியூட்டிக்குக் கிளம்பற வழியைப் பாருங்க..."

"சே... இதுதானா! நான் என்னவோ ஏதோ சொல்லப் போற அப்படின்னு இருந்தேன்."

"சித்து... சாயங்காலம் பேசலாம். இப்ப கிளம்புங்க."

"இனிமேல் பேச்செல்லாம் கிடையாது."

"என்னது...?"

"நேரா கல்யாண நாளை ஃபிக்ஸ் செய்ய வேண டியதுதான். அம்மாகிட்டச் சொல்லிட்டுப் போறேன்..."

அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

"நீங்கள் ஆச்சு... ஆன்ட்டி ஆச்சு..." என்று அவனைத் தள்ளினாள்.

அவன் சிரித்தபடியே அறையிலிருந்து வெளியேறி னான்.

"என்னடா... கிளம்பலை இன்னும்..."

"வர்ஷினியும் அதையே கேக்கறா... நீங்களும் அதையே கேளுங்க... வர... வர நான் வீட்ல இருக்கறது உங்க இரண்டு பேருக்கும் பிடிக்கலை போல..."

"என்னடா சுள்ளுன்னு பேசற... சீக்கிரமா கல்யாணத் தேதியைக் குறிக்கணும் போல..."

"அம்மான்னா அம்மாதான். அதைச் செய்யுங்க முதல்ல..." என்றபடியே அவர்களின் கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சினான்.

"இன்னிக்குப் போய் நான் நல்ல முகூர்த்த நாளாப் பார்த்துட்டு வரேன்டா. தாஜா செஞ்சது போதும்."

"ம்... அம்மா, யூ ஆர் ஸ்வீட்!" என்றபடியே, தன் அறைக்குள் சென்றான் சித்தார்த்.

சித்தார்த்தின் மன நிலையை அறிந்து கொண்ட அபூர்வா தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். இவ் வளவு நாட்களாகத் திருமணப் பேச்சு எடுக்கும் போதெல் லாம் பிடி கொடுத்துப் பேசாத மகன் இப்பொழுது ஒரு வழியாகத் திருமணத்திற்கு ஒத்துக்கொண்டு விட்டானே.

அதுவே நல்ல விஷயம். எல்லாவற்றுக்கும் காரணம் வர்ஷினிதான். நல்ல பெண். சித்தார்த்துக்கு ஏற்ற ஜோடிதான்.

வந்த கொஞ்ச நாட்களிலேயே பொறுப்பாக மளமள வென்று வேலையைக் கற்றுக் கொண்டாள். அவள் பழைய வாழ்க்கையில் ஏதேனும் பிரச்சனைகள் இருக் குமா?

அவள் யாராக இருக்கும்? அவள் குடும்பத்தினர் யார்? ஏன் இவளைத் தேடவே முயற்சி செய்யவில்லை?

முட்களாகக் கேள்விகள் மனதைத் தைத்தன.

எந்தக் கேள்விக்கும் விடை தெரியாது. அவரிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.



சரி... கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுத் திருமண வேலையில் இறங்க வேண்டும் என்று முடிவு செய்தார் அவர்.

அன்று முழுக்க ஏதாவது காரணம் சொல்லிக் கொண்டு, பில்லிங் செக்ஷனுக்கு அடிக்கடி விஜயம் செய்தான் சித்தார்த்.

"பாஸ்... இன்னிக்கு என்ன இந்தப் பக்கம் அடிக்கடி வர்றீங்க... ஏதேனும் பிரச்சனையா? நான் வேண்டு மானால் உதவி செய்யட்டுமா?" என்று ராஜ் முன் வந்தான்.

"நீ உன் வேலையை ஒழுங்காப் பாருடா. அதுவே போதும் எனக்கு."

"என்ன பாஸ்... வர்ஷனி முன்னாடி என் மானத்தை வாங்கறீங்க..."

"ஏய்... இனிமேல் அவங்களை மரியாதையாய்க் கூப்பிடணும்... புரிஞ்சுதா..."

"ஏன்... பாஸ், திடீர்னு..."

"ஏய்... சும்மா தொணதொணன்னு கேள்வி கேட் காதே... சொன்னதைச் செய்..."

"ஓ.கே. பாஸ்... அவங்களை எப்படிக் கூப்பிட ணும்னு அதையும் நீங்களே சொல்லிடுங்க..."

"நீங்க எனக்கு அண்ணன் மாதிரின்னு அடிக்கடி சொல்வாய்தானே?"

"ஆமாம் பாஸ்..."

"அப்ப வர்ஷினியை அண்ணின்னு கூப்பிடு..."

"பாஸ்..."

வர்ஷினியின் முகம் சிவந்தது.

"வர்ஷினி... ஸாரி அண்ணி. நீங்ககூட என்கிட்ட சொல்லவே இல்லை பாருங்க..."

வர்ஷினியின் முகம் மேலும் சிவந்தது.

"ஏய், கல்யாணத்துக்கு மாப்பிள்ளைத் தோழன் நீ தான்டா..."

"தேங்க்ஸ் அண்ணா. ஒரு சின்ன வேண்டுகோள்..."

"என்னடா...?"

"யாராவது ஒரு நல்ல கேட்டரரா பார்த்துச் சமையலுக்கு ஒப்படைச்சிடலாமே?"

"ஏய்... உனக்கு எவ்வளவு தைரியம். என்கிட்டயே வந்து என் சமையலைப் பற்றிக் குறை சொல்ற..." என்று அவனை அடிப்பது போல் கை ஓங்கினான் அவன்.

"அண்ணி! காப்பாத்துங்க..." என்று வர்ஷினியின் பின்னால் ஒளிந்து கொண்டான் ராஜ்.

'சரியான கில்லாடிடா நீ..." என்று சிரித்தான் சித்தார்த்.

"உங்க தம்பியாச்சே நான். சரி, எப்ப கல்யாணம்?"

"ம்... உன் அண்ணியைக் கேள். ரொம்ப பந்தா செய்யறா..."



"நான் என்ன பந்தா செஞ்சேன். சும்மா சொல்றார் உங்க அண்ணன்..."

"ம்... சின்னச் சின்னச் சலுகைகூட இல்லைடா கல்யாணத்துக்கு முன்னால. சே... சே.. என்ன கொடுமை இது..." புலம்பினான் சித்தார்த்.

அவன் எதைக் குறிப்பிடுகிறான் என்று அவளுக்குப் புரிந்தது. அவள் முகத்தில் வெட்க ரேகைகள் தெரிந்தன. கன்னங்களில் ரோஜாப் பூ பூத்தது.

"சித்து... ப்ளீஸ் கிளம்புங்க. கஸ்டமர்ஸ் வர்ற நேரம்..." என்று கெஞ்சினாள் வர்ஷினி.

"பாஸ்... உங்களை இந்த மாதிரி பெயர் சொல்லி யாரும் கூப்பிட்டது இல்லையே இதுவரை... அண்ணி! ரொம்ப சூப்பரா பெயர் வெச்சிருக்கீங்க அண்ணனுக்கு... சித்து... ஆஹா... ஆஹா..."

"டேய்... அவ கூப்பிட மட்டும்தான்டா அது. உனக்கெல்லாம் இல்லை. புரிஞ்சுதா...?"

"யெஸ்... பாஸ்... உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகாது..."

அதைக் கேட்ட வர்ஷினி சிரித்தாள்.

அன்றைய பொழுது கேலியும், கிண்டலுமாக இனிமையாகக் கழிந்தது.

ஹோட்டலில் வேலை பார்த்த அனைவரும் அவளுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஹோட்டலை மூடச் சொல்லிவிட்டுச் சித்தார்த்தும், அவளும் வீட்டுக்குக் கிளம்பத் தயாரானார்கள்.

"ஹோட்டலில் இருப்பவர்கள் எல்லாருமே உங்கள் மேல் ரொம்ப அன்பு கலந்த மரியாதை வைத்து இருக்காங்க சித்து. உங்களை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது."

"ம்... சமையலைச் சும்மா ஜீவனே இல்லாமல் சலிப்போடு, வெறுப்போடு செய்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. சமைக்கும்பொழுது பதட்டம் இல்லாமல் அமைதியாக, முடிந்தால் உற்சாகமாகச் சமைக்க வேண்டும் என்பதே நான் அம்மாவிடம்தான் கற்றுக்கொண்டேன்."

"ஏன் அப்படி...?"

"ஏன் என்றால் நாம் சமைக்கும்பொழுது என்ன மன நிலையில் இருக்கிறோமோ அதே மாதிரியான எண்ணங்கள் உணவின் மேலும் படியும்.

"பதட்டமான மன நிலையோடு சமைக்கப்படும் உணவை உட்கொள்பவர்களுக்கும் அந்தப் பதட்டம் தொற்றிக் கொள்ளும். அதனால்தான் உணவு சமைப்பவர்கள் ரிலாக்ஸ்டாக இருப்பது முக்கியம்."

"ஓ... இவ்வளவு விஷயம் இருக்கா சமையலில். ஐ அம் ஸாரி... எனக்கு இதைப் பற்றி எதுவுமே தெரியவில்லை."

"இட் இஸ் ஓ.கே. வனி. உனக்குத் தெரியாததை எல்லாம் சொல்லித் தர நான் இருக்கிறேன்..." என்றான் ஒரு மாதிரிக் குரலில்.



அதற்குள் கார் அவர்கள் தெருவில் பாய்ந்தது. வீட்டின் முன்னே ஒரு படகுக் கார் - பி.எம்.டபிள்யூ. நிற்பதைச் சித்தார்த் கவனித்தான்.

ஏனோ அவன் மூளையில் எச்சரிக்கை மணி அடித்தது. யாராக இருக்கும் இந்த நேரத்தில்? அதுவும் இந்தக் காரில்? ஒருவேளை வர்ஷினியைத் தேடிக் கொண்டு யாராவது வந்திருப்பார்களோ?

"வனி, உன்னைத் தேடிக் கொண்டு யாரோ வந்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நாம் முன்பு போலீஸில் சொல்லி இருந்தோம் அல்லவா? அதன் மூலமாகத்தான் இவர்கள் வந்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன்..." என்றான் மெதுவாக.

"நோ... சித்து. வண்டியை வேறு எங்காவது ஓட்டிக் கொண்டு போங்க..."

"ஏன்... வனி? ஏன்மா...? உன்னைத் தேடிக் கொண்டு யாருமே வரவில்லையே என்று வருத்தப் பட்டாயே. இப்ப இப்படிச் சொல்றியே. ஏன்டா...?"

"சித்து... எனக்குப் பயமா இருக்கு!" என்றபடியே அழத் தொடங்கினாள்.

காரை நிறுத்தினான் சித்தார்த்.

அவன் மனதிலும் பயம் பரவியது. ஆனால் சமாளித்துக் கொண்டு பேசினான்.

"வனி... என்ன, பயமா உனக்கு?"

"ஏ... எனக்கு... ஒருவேளை... நான் திருமணமான வளாக இருந்தால்..." வார்த்தைகள் அழுகையினூடே வெளிப்பட்டன.

"ம்... நாம் இங்கு இருந்து கொண்டு கற்பனை செய்ய வேண்டாம்... யார் வந்து இருக்கிறார்கள் என்று போய்ப் பார்க்கலாம், வனி."

"என்னைக் கைவிட்டு விடாதீர்கள், சித்து!" - சோர்வாக ஒலித்தது அவள் குரல்.

"மாட்டவே மாட்டேன். வா, வனி!" என்றபடியே, காரிலிருந்து இறங்கினான் அவன்.

## 8

உன்
கூந்தலைச்
செல்லமாக
வருடும்
காற்றின்
மேல்கூடக்
கோபம்
வருகிறதே
பெண்ணே!
ஏன்?



என்னுடைய வீட்டினுள் நுழையும்பொழுது, இது நாள்வரை நான் பதட்டமாக உணர்ந்தது இல்லை. ஆனால் இன்று பதட்டமாக இருக்கிறதே என்று நினைத்த படியே காலிங்பெல்லை அழுத்தினான் சித்தார்த்.

கதவைத் திறந்தார் அபூர்வா. அவர் முகம் வாட்டமாக இருந்தது.

"வாடா சித்தார்த். வர்ஷினியைத் தேடிக் கொண்டு ரெண்டு பேர் வந்திருக்காங்க..."

"ஓ... அப்படியா?" என்றவனின் குரல் நடுங்கியது. இதயம் துடித்தது.

ஹால் சோபாவில் உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்தான் அவன். ஒருவருக்கு ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். கண்ணாடி அணிந்து இருந்தார்.

முகத்தில் சுருக்கங்கள் தெரிந்தன. அருகில் உட்கார்ந்திருந்தவனுக்குக் கிட்டத்தட்ட முப்பது வயது இருக்கும். அவன் முகத்தில் செழுமை தெரிந்தது.

அவன் அணிந்திருந்த உடை, ஷூ, கைக்கடிகாரம் எல்லாவற்றிலும் பணக்காரத்தனம் தெரிந்தது.

"ஹாய் அபி..." என்று புதியவன் ஓடி வந்து வர்ஷினியை அணைத்துக் கொண்டான்.

சித்தார்த்தின் முகம் இறுகியது. கைவிரல்களை மடக்கிக் கொண்டு கோபத்தைக் கட்டுப்படுத்தினான்.

"விடுங்க... யார் நீங்க?"

வர்ஷினியின் குரல் தெளிவாகக் கேட்டது.

"ஏய்... நான்தான் நகுல். என்னை உனக்கு ஞாபகம் இல்லையா?"

"இல்லை..."

"லுக் மிஸ்டர். வர்ஷினிதான் உங்களைத் தெரிய வில்லை என்று சொல்கிறாளே! அப்புறம் ஏன் அவளைத் தொல்லை செய்யறீங்க?" என்று படபடத்தான் சித்தார்த்.

"நீ யார் அதைச் சொல்வதற்கு?" நகுல் கத்தினான்.

"நான் சித்தார்த். வர்ஷினி இப்பொழுது என் பாது காப்பில் இருக்கிறாள்."

"யார் அது வர்ஷினி? இவள் அபிநயா. நான் செல்லமாக அபி என்று கூப்பிடுவேன். எப்படி அபி என்னை மறந்தாய்? திருமணம் நிச்சயம் ஆகிவிட்டது. துபாயில் இரண்டு மாதங்கள் முன்பு உன் அப்பா உயிரோடு இருந்தபொழுது நமக்கு நிச்சயதார்த்தம் செய்தார்களே...

"அதை எல்லாம் எப்படி உன்னால் மறக்க முடிந்தது, அபி? சொல்..." என்று அவளை நெருங் கினான்.

ஆனால் அதற்குள் சித்தார்த் அவன் கையைப் பற்றினான்.

"நகுல்... அவளைத் தொந்தரவு செய்யாதீர்கள். உட்காருங்கள்..." என்றான் சித்தார்த்.



"நீ யார் அதைச் சொல்வதற்கு...? எனக்கு அபியை ஆறு வருஷமாகத் தெரியும். உனக்கு அவளை எவ்வளவு நாட்களாகத் தெரியும்? கமான். சொல்.

"ஒரு மாதமாக உனக்கு அவளைத் தெரியும். தட்ஸ் ஆல். அதை மனதில் வைத்துக் கொள். அதனால் உனக்குத்தான் அவள் மேல் அக்கறை இருப்பது போல் நடிக்காதே..." சீறினான் நகுல்.

"ஓ.கே. கூல்... வர்ஷினிக்கு அம்னீஷியா. அவளுக்குப் பழசு எதுவும் ஞாபகம் இல்லை. அவள் பெயர் உட்பட. போதுமா? இந்த மாதிரி ஒரு சூழலில் நான் எப்படி உங்களை நம்புவது?"

"என்னடா இது... அம்னீஷியாவா? அப்படின்னா என்ன?" முதல் முறையாகப் பெரியவர் வாயைத் திறந்தார்.

"அப்பா... சும்மா இருங்க..." அவரை அடக்கினான் நகுல்.

வர்ஷினி அபூர்வாவின் பின்னால் அவர் தோள் களைப் பற்றியபடியே நின்று கொண்டிருந்தாள்.

'கடவுளே! ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறாய்? எது நடக்கக்கூடாது என்று நினைத்தேனோ அது என் வாழ்க்கையில் நடக்கிறதே!'

மனதிற்குள் புலம்பினாள் அவள்.

"மிஸ்டர் நகுல்... வர்ஷினியை நீங்கள் எப்பொழுது கடைசியாகப் பார்த்தீர்கள்?"

"நானும் அபியும் சென்னையைச் சுற்றிப் பார்க்க வந்தோம், ஒரு மாதம் முன்பு. என் மாமாவின் ரியல் எஸ்டேட் கம்பெனி ஒன்று சென்னையில் உள்ளது. அவர் இறந்துவிட்டதால் நிர்வாகத்தில் கொஞ்சம் குழப்பம்.

"அதைத் தீர்த்து வைக்கலாம் என்ற எண்ணத்தில் தான் நான் அபியுடன் சென்னைக்கு வந்தேன். அதோடு சென்னை அபிக்குப் பிடிக்கும். துக்கம் குறையும் என்ற நல்லெண்ணத்தில்தான் அவளை இங்கு அழைத்து வந்தேன். என் போதாத நேரம் இப்படி ஆகிவிட்டது..." என்று குறைபட்டுக் கொண்டான் நகுல்.

"நீங்கள் இவ்வளவு வருத்தப்படும்படி என்ன ஆச்சு மிஸ்டர் நகுல்...?"

"அபியும் நானும் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அவள் படகில் சவாரி செய்ய வேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டாள்."

"எந்தக் கடற்கரை அது?"

"பெசன்ட் நகர் பீச்..."

"ஓ... சரி. அப்புறம் என்ன நடந்தது?"

"எனக்குப் படகை இயக்கவெல்லாம் தெரியாது. அதனால் படகோட்டி ஒருத்தனைக் கூப்பிட்டேன். அவன் எங்களை அழைத்துச் செல்வதற்குச் சம்மதித்தான்."

"ஓ... படகில் போனீர்களா?"

"யெஸ்... அபி குழந்தை போல் சந்தோஷமாகப் படகுச் சவாரியை ரசித்தபடியே வந்தாள். கரைக்குத் திரும்பலாம், இனிமேல் போவது சரி இல்லை என்று படகோட்டி எவ்வளவோ சொன்னான். ஆனால் அபி அதைக் கேட்கவில்லை. இன்னும் கொஞ்சம் தூரம் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்."



"படகோட்டியும் அதற்கு ஒத்துக் கொண்டானா?"

"முதலில் மறுத்தான். ஆனால் நான் அதிகமாகப் பணம் கொடுத்தவுடன் அவன் ஒத்துக் கொண்டான். அப்பொழுதுதான் அந்த விபரீதம் நடந்தது. அபி படகில் இருந்து எழுந்திருக்க முயன்றாள். படகு பேலன்ஸ் இல்லாமல் ஆடத் தொடங்கியது. ஒரு ராட்சச அலை படகை நோக்கி வந்தது. அப்புறம் என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆனால், அபியைப் படகில் காண வில்லை. எ... எனக்கு என்ன செய்வது என்றே புரிய வில்லை."

"ஓ.கே... நீங்கள் என்ன செய்தீர்கள், மிஸ்டர் நகுல்...?" என்றான் அழுத்தமாகச் சித்தார்த்.

"எனக்கு நீச்சல் தெரியாது. அந்தப் படகோட்டியும் கடலில் இறங்கத் தீர்மானமாக மறுத்துவிட்டான். அதனால் வேறு வழி இன்றி நான் கரைக்கு வந்துவிட்டேன். அந்தப் படகோட்டியால்தான் எல்லாம்.

"ஸாரி அபி... நீ நிறையக் கஷ்டங்களை ஒரு மாதமாக அனுபவித்து விட்டாய். இனி ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்க வேண்டாம், அபி. வா, போகலாம்..."

"மிஸ்டர்... நகுல்... கொஞ்சம் பொறுமையா இருங்க. ஒரு மாதம் கழித்து ஏன் உங்களுக்கு ஞானோதயம் வந்தது?

"வர்ஷினியை நான் காப்பாற்றியவுடனேயே நான் போலீஸில் புகார் கொடுத்துவிட்டேன். யாராவது வர்ஷினியைப் பற்றி விசாரித்தால் எனக்குத் தகவல் தருமாறு சொல்லி இருந்தேன்.

"நீங்கள் போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்தீர்களா? வர்ஷினி கடலில் மூழ்கிவிட்டாள் என்று அவர்களிடம் சொன்னீர்களா?" என்றான் நிதானமாகச் சித்தார்த்.

"இ... இல்லை. எனக்குப் பதட்டமாக இருந்தது. அதோடு எனக்கு முக்கியமான மீட்டிங்குகள் இருந்தன. நிறையப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்துப் போட வேண்டி யிருந்தது. அதனால் நான் உடனே துபாய் போய் விட்டேன். என் பிசினஸ் அப்படி..."

"சோ... வர்ஷினியை அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டீர்கள்... அப்படித்தானே?"

"என்ன... ரொம்ப பேசற. ஏதோ நான் ப்ளான் செய்து இவளைப் படகில் இருந்து தள்ளிவிட்ட மாதிரி இல்ல பேசற... இது சரியில்லை.

"ஏதோ அபி உன் வீட்டில் இருந்திருக்கிறாள் ஒரு மாதமாக என்பதற்காக நான் பொறுமையாக இருக்கிறேன். இல்லாவிட்டால் நடப்பதே வேறு..."

"தம்பி, பொறுமையா இருப்பா?" நகுலின் அப்பா அவனை அடக்கினார்.



"சரி. டாக்டர் என்ன சொன்னார்? இவளுக்கு எப்ப பழைய ஞாபகங்கள் எல்லாம் வருமாம்?"

"அதைப் பற்றி உறுதியாக எதுவும் சொல்ல முடியாது என்று டாக்டர் சொன்னார்... நினைவு வந்தாலும் வரலாம்... வராமலும் போகலாம்," என்றான் சித்தார்த்.

ஏனோ நகுல் நடந்து கொள்ளும் முறை, அவன் பேச்சு எல்லாமே அவனுக்கு எரிச்சலை வரவழைத்தது.

"இனிமேல் உனக்குப் பழைய ஞாபகம் வந்துவிடும் அபி. எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நாம் சீக்கிரமாகக் கல்யாணம் செய்து கொள்ளலாம் அபி. அப்பொழுது உனக்குப் பழைய ஞாபகம் எல்லாம் வந்துவிடும்."

"நீங்கள் ஏன் இவளை அவசரப் படுத்துகிறீர்கள் மிஸ்டர் நகுல்?"

"எனக்கு நிறைய பிசினஸ் வேலைகள் உள்ளன. நான் சும்மா இங்கே உட்கார்ந்து கொண்டு நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை."

"ஓ... அப்ப கிளம்ப வேண்டியதுதானே..."

"நான் தனியாகப் போவதற்காக இங்கே வரவில்லை. அதைப் புரிந்து கொள். நான் அபியை அழைத்துப் போகத்தான் வந்தேன்."

"வர்ஷினி வர மாட்டாள்..."

"அதை அவள் சொல்லட்டும்..."

வர்ஷினியின் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

"வனி, சொல். நீ இங்கேயே இருக்க வேண்டும் என்று சொல்..."

அவள் மௌனமாக இருந்தாள்.

"அபி... வா போகலாம்!" அவள் கையைப் பற்றினான் நகுல்.

அவள் கையை உதறிக் கொண்டாள்.

"சித்து... நான் இவருடன் போகிறேன்..."

சித்தார்த்தின் கண்களில் அடிபட்ட பறவையின் வலி தெரிந்தது.

"வனி... என்னமா இது?" அவன் குரல் உடைந்தது.

"சித்து... நான் யார் என்று தெரிந்து கொள்ள மட்டுமே போகிறேன். நான் வாழ்ந்த இடம், பழகிய இடம், நான் உபயோகப்படுத்திய பொருட்கள் எல்லாவற்றையும் நான் பார்க்க வேண்டும்."

"வனி, ஆனால் நீ..." என்று அவன் முடிப்பதற்குள் அபூர்வா குறுக்கிட்டார்.

"சித்தார்த்! அவளைத் தடுக்காதே. அவள் போனால் தான் அவளுக்குப் பழைய நிகழ்ச்சிகள் நினைவுக்கு வரும். அவள் யார் என்று அவளுக்குத் தெரியாவிட்டால் ஒரு குழப்பம் அவள் மனதில் எப்பொழுதும் இருக்கும். அதனால் அவளைப் போக விடு. அதுதான் அவளுக்கு நல்லது."

"சரிம்மா..." என்றான், மெல்லிய குரலில்.



"சித்து... நான் யார் என்று தெரிந்த பின்பு உடனே ஓடி வந்து விடுவேன் இங்கே..."

"ம்... எதிர்காலத்தை நான் எப்பொழுதுமே நம்பத் தயாராக இல்லை வர்ஷினி. பை... பெஸ்ட் ஆஃப் லக்..." என்றான், வறண்ட குரலில்.

"ரொம்ப தேங்க்ஸ் தம்பி. இவ்வளவு நாளா அபியைப் பத்திரமாப் பார்த்துக் கொண்டதற்கு..." என்றார் பெரியவர், அவன் கைகளைப் பற்றியபடியே.

"பரவாயில்லை ஸார்..." என்றபடியே, கைகளை விடுவித்துக் கொண்டான் அவன்.

"போயிட்டு வரேன் ஆன்ட்டி..." என்றபடியே, அங்கு இருந்து நகர்ந்தாள் வர்ஷினி.

"உங்க அட்ரஸ், போன் நம்பர் கொடுத்துட்டுப் போங்க தம்பி!" என்றார் அபூர்வா.

"இந்தாங்க..." என்று தன் கோட் பாக்கெட்டிலிருந்து விசிட்டிங் கார்டை எடுத்து அவர்களிடம் நீட்டினான் நகுல்.

கார் புறப்படும் சத்தம் கேட்டது.

சித்தார்த் தன் மனதில் பிரளயம் ஏற்படுவது போல் உணர்ந்தான். இந்த உலகில் சட்டெனத் தான் தனியாளாக நிற்பது போல் ஒரு பிரமை ஏற்பட்டது.

அவனை மீறிக் கண்களில் கண்ணீர் பெருகியது.

"அம்மா... அம்மா..." என்று அரற்றியவனை அணைத்து ஆறுதல் சொன்னார் அபூர்வா.

"சித்தார்த்... இது ரொம்ப கஷ்டமான விஷயம்தான். ஆனால் இதுதான் உனக்கும் நல்லது. வர்ஷினிக்கும் நல்லது."

"முடியலைம்மா... என்னால் அவளை மறக்க முடியாதுமா. அவள் வருவாளாம்மா... என்னைத் தேடி வருவாளா?

"சட்டுன்னு இப்படி மனசை மாத்திக்கிட்டு அவன் பின்னாடி போயிட்டாளே. ஏன்ம்மா இப்படிச் செஞ்சா? அவள் என்னைக் காதலிக்கவே இல்லையாம்மா?"

"சித்தார்த்! அவள் உன்மேல் வைத்து இருப்பது உண்மையான அன்பு என்றுதான் என் மனதிற்குப் படுகிறது. அதனால் அவள் வருவாள்..."

"எப்ப அம்மா...?"

சிறு குழந்தை போல் கேள்வி கேட்கும் சித்தார்த் திற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தார் அபூர்வா.

# 9

நீ
போகும்
வழியில்
உன்
பின்னால்
வருவேன்



நிழல்
போல!
உன் அனுமதி
தேவை இல்லை
பெண்ணே!

அடுத்த ஒரு வாரம் நரகம் போல் இருந்தது சித்தார்த்திற்கு. ஹோட்டலுக்குப் போய் வேலையைக் கவனிக்க முடியாமல் திண்டாடினான்.

வர்ஷினியின் நினைவு அவனை விரட்டியது. உற்சாகமே இல்லாமல் இருந்தான். வாழ்க்கையே சட்டென வெறுமையாக மாறியது போல் ஒரு உணர்வு.

இதே நிலை தொடர்ந்து நீடித்தால் தன் நிலை என்னவாகும்? ஏதாவது ஒரு ஹாஸ்பிடலில் அட்மிட் ஆக வேண்டியதுதான் போல என்று நினைத்துக் கொண்டான்.

ஹாஸ்பிடல் என்றவுடனேயே அவள் நினைப்பு மீண்டும் மனதை ஆக்கிரமித்தது.

"பாஸ், நான் வேண்டுமானால் இங்கே கிச்சனில் இருக்கட்டுமா?" என்ற ராஜின் குரல் அவன் யோச னையைக் கலைத்தது.

"ஏன் உனக்கு இந்த யோசனை?"

"இல்ல, கார்ன்-மஷ்ரூம் ஆர்டர் செஞ்சிருக்கார் கஸ்டமர்."

"இப்பதானே அந்த க்ரேவியைக் கொடுத்தேன்."

"ம்... நீங்க கொடுத்தது கார்ன்-மஷ்ரூம் இல்ல பாஸ்!" என்றான் ராஜ் தயங்கியபடியே.

"வாட்... வேறு என்ன கொடுத்தேன்?"

"ம்... கார்னுக்குப் பதிலாக உருளைக்கிழக்கு அதில் இருந்தது பாஸ். வந்து சாப்பிட்டவர் நம்ம ரெகுலர் கஸ்டமர். அதனால என்னைத் தனியாகக் கூப்பிட்டுக் கேட்டார் பாஸ்..."

"ஸாரி... ஸாரி ராஜ். இனிமேல் நான் கவனமா இருக்கேன். இன்னும் ஒரு ஃபைவ் மினிட்ஸில் வேற க்ரேவி, கார்ன் போட்டது தயார் செய்யறேன். அவரை வெயிட் பண்ணச் சொல். நான் பர்சனலா சாரி கேட்டதாக அவரிடம் சொல்..." என்றான் சித்தார்த்.

"ஓ.கே... பாஸ். நீங்க நடந்ததை எல்லாம் மறந்திடுங்க. வர்ஷினி இல்லாட்டி என்ன... நான் தர்ஷினியை ஏற்பாடு செய்யறேன்..."

"ஷட்அப் ராஜ். போய் உன் வேலையைப் பார்..."

"ஆமாம்... நல்லது சொன்னா கேட்க மாட்டீங்களே..." என்று முணுமுணுத்தபடியே அங்கிருந்து நகர்ந்தான் ராஜ்.

எல்லா வேலையும் முடிந்து பின்னர் கடற்கரையில் தனிமையில் நேரத்தைச் செலவிடுவது அவனின் வழக்கமாக மாறிவிட்டது.



வர்ஷினி போன பின்புதான் இந்த வழக்கம். சீக்கிரம் கடற்கரைக்குக் கிளம்ப வேண்டும்.

அவள் இப்பொழுது என்ன செய்துகொண்டு இருப்பாள்? என் நினைவு அவளுக்கு இருக்குமா? அந்த நகுலால் அவளுக்கு ஏதேனும் பிரச்சினை இருந்து இருக்குமா?

என் கைபேசி எண் அவளுக்குத் தெரியும். ஏன் ஃபோன் செய்யவில்லை?

ஏதேதோ கேள்விகள் அவன் மனதைக் குடைந்தன.

"பில்லிங் வேலை எனக்கு மறுபடியும் கிடைக்குமா?" வர்ஷினியின் குரல் காதில் ஒலிப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

சே! இல்லாதவளை இருப்பது போல் கற்பனை செய்து கொள்கிறேனே!

இதே நிலைமை நீடித்தால் நான் மருத்துவ மனையில்தான் அட்மிட் ஆக வேண்டும் என்று தன்னையே கடிந்து கொண்டவன் திரும்பினான்.

அவன் விழிகள் வியப்பால் விரிந்தன. இது... இது என்ன என் கற்பனையா! வனி எப்படி இங்கே? முதலில் என் காதில் அவள் குரல் கேட்டது. இப்பொழுது என் கண் முன்னே நிற்கிறாளே! இது என்ன கனவா? குழம்பினான் சித்தார்த்.

"எனக்குப் பதிலாக வேறு ஆளை வைத்துக் கொண்டீர்கள் போல!" என்றாள் அவள்.

"உனக்குப் பதிலாக வேறு யாரையும் உன் இடத்தில் வைக்க முடியாது..." என்றான் மெதுவாக அவன்.

"ஏன் நான் அவ்வளவு மோசமாக இருந்தேனா...? இல்ல, அவ்வளவு நல்லவளாக இருந்தேனா...?"

"நீ கடல் தேவதை... நீ... நீதான்..." என்றபடியே, அவளை நெருங்கினான்.

அவள் சிரித்தாள்.

"யார் நீ... அபிநயாவா... இல்லை... வனியா...?" என்று கெஞ்சினான்.

"அபிநயாவும் நான்தான், வனியும் நான்தான்..."

"உனக்கு எல்லாமே ஞாபகம் வந்து விட்டதா?" பதற்றம் தெரிந்தது அவன் குரலில்.

"ம்... எல்லாமே நினைவுக்கு வந்துவிட்டது. என் பெயர், என் தனிமை நிறைந்த குழந்தைப் பருவம், என் தந்தை... நகுல்... எல்லாமே நினைவுக்கு வந்துவிட்டது."

"ஓ... இப்ப எதுக்கு இங்கே வந்தாய்? எனக்கு குட்பை சொல்லவா?" கேட்கும்பொழுதே தன் இதயத் துடிப்பு நிற்பது போல் உணர்ந்தான் அவன்.

"இல்லை, உங்களுக்கு ஹலோ சொல்ல வந்தேன்..."

"அப்படி என்றால் என்ன அர்த்தம்..?"

"என்னை நகுல் எனும் பணக்கார அரக்கனிடம் இருந்து காப்பாற்றிய உங்களைப் பார்க்க வந்தேன்..."



"ஓ... அப்படியா? பணக்கார அரக்கன் என்று தெரிந்தும் ஏன் அவனைத் திருமணம் செய்துகொள்ள நீ ஒத்துக்கொண்டாய்? உனக்கும் அவனுக்கும்தானே நிச்சயம் செய்யப்பட்டது? அப்பொழுது உனக்கு இது தெரியவில்லையா?"

அவளிடமிருந்து பெருமூச்சுப் பிறந்தது.

"ம்... இறந்தவர்களைப் பற்றித் தப்பாகச் சொல்லக் கூடாது என்று சொல்வார்கள். ஆனால், வேறு வழி இல்லை. சொல்லித்தான் ஆக வேண்டும். என் அப்பா துபாயில் பெரிய பிசினஸ்மேன். என் அம்மாவின் முகமே எனக்கு ஞாபகம் இல்லை. காரணம், எனக்கு மூன்று வயதாக இருக்கும் பொழுதே என் அம்மா இறந்து விட்டார்கள்.

"அம்மாவின் அம்மா, அதாவது என் பாட்டி என்னை வளர்த்தார்கள். அப்பா எப்பவும் பிஸினஸைப் பற்றியே நினைத்துக்கொண்டு இருப்பார்கள். எப்பவுமே அதைப் பற்றிய பேச்சுத்தான் அவரிடம் இருந்து வெளிப்படும்.

"பிஸினஸ் மேலும் நன்றாக வளரும் என்ற எண்ணத்தில்தான் அவர் என்னை நகுலிற்குத் திருமணம் செய்து கொடுக்க முன் வந்தார். நான் அதை மறுக்க வில்லை. மறுக்க வேண்டும் என்ற எண்ணம் துளிகூட என் மனதில் தோன்றவில்லை. காரணம் அப்பாவின் அச்சாக நான் இருந்திருக்கிறேன்.

"சித்து, உன்னைப் போல அல்ல அபிநயா. நீ ரொம்ப நல்லவன். மற்றவர்களுக்காக உன்னால் முடிந்த

உதவிகளைச் செய்கிறாய்...!" என்றவளின் கண்களில் அன்பு பொங்கியது.

"நான்... உன்னைத் தேடி வரலாம் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன், வனி. ஆனால், தயக்கமாக இருந்தது. நீ நகுல் பின்னால் சட்டெனப் போனவுடன் நான் நொறுங்கிப் போய்விட்டேன் வனி!" என்றவனின் கண்கள் கலங்கின.

"நான் நகுல் பின்னால் போகவில்லை. நான் யார் என்று தெரிந்து கொள்ளப் போனேன், சித்து..."

"அங்கே போனவுடன் உனக்கு நினைவு திரும்பி விட்டதா வனி?"

"ம்... அந்தப் பத்தாயிரம் சதுர அடி பங்களாவைப் பார்த்தவுடன் எனக்கு எல்லாமே நினைவுக்கு வந்துவிட்டது."

"ஓ... நீ எப்படிக் கடலில் சிக்கினாய்...?"

"நகுல்... சொன்னது உண்மைதான்...

"ம்.. நான்தான் அவனைச் சந்தேகப்பட்டுவிட்டேன் போல... சே... சே... அவன் நல்லவன்தான். ஆனால், அவனுக்குப் பேராசை சித்து. பணத்திற்காகத்தான் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டான்."

"சரி. நகுலிடம் என்ன சொல்லிவிட்டு இங்கே வந்தாய்?"

"உங்களைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னேன்..."



"வாட்..."

"ஏன் சித்து... எ... என்னைப் பிடிக்கவில்லையா?"

அவன் மௌனமாக இருந்தான்.

"சித்து, என் நடத்தை மேல் உங்களுக்கு..."

அவள் முடிக்கும் முன்பு சீறினான் அவன்.

"வாயை மூடு, வனி..."

"அப்ப ஏன் தயக்கம், சித்து?"

"நீ... பணக்காரப் பெண், வனி. நான்... உன்னளவு இல்லை..."

அவள் அவன் கையைப் பற்றினாள்.

"என்னைக் கடலில் இருந்து காப்பாற்றியவர் நீங்கள், உங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல். நீங்கள் என்னை நான் யார் என்று தெரியாத பொழுது காப்பாற்றினீர்கள்.

"உங்கள் பாதுகாப்பில் நான் பத்திரமாக இருந்தேன். தாயின் அரவணைப்பையும், அன்பையும், பாதுகாப்பையும் எனக்குக் கொடுத்தவர் நீங்கள்...

"நீங்கள் இல்லாத வாழ்க்கையை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. பயமா இருக்கு, சித்து!" என்றவளின் குரல் நடுங்கியது.

அவன் சட்டென அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"இனி நான் உன்னை என் கைச் சிறையில்தான் வைப்பேன், வனி. உன்னை எங்கும் போக விட மாட்டேன்..." என்றபடியே, அவள் இதழ்களைத் தன் உதடுகளால் ஒத்தி எடுத்தான்.

வெளியே வானத்தில் பவனி வந்து கொண்டிருந்த நிலா அமுதைப் பொழிந்தபடி இருந்தது.

அன்பெனும் அமுதில் மூழ்கினர் இருவரும்.